Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 15, 2022

திங்கட்கிழமை ஒகஸ்ட் 15, 2022 | ஒளி: 08 கதிர் 075 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free

## அண்டைய நாடுகளுடனும் நல்லுறவை பேணுவதை நாங்கள் உறுதியளிக்கிறோம்

### பாக். சுதந்திர தினத்தில் உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு



அனைத்து நாடுகளுடனும், குறிப்பாக நமது அண்டை நாடுகளுடனும் நல்லுறவை பேணுவதை நாங்கள் உறுதியளிக்கிறோம் எனத் தெரிவித்துள்ள இலங்கையில் உள்ள பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் ஸ்தானிகர்,

தொடர்ச்சி P2



## இந்திய சுதந்திர தினத்துக்கு தலைவர்கள் வாழ்த்து

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம் இன்று (15) இந்தியா உள்ளிட்ட நாடுகளில் கொண்டாடப்படுகின்றது. அதற்கு, இலங்கையின் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்களுடைய வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.



## 1,590 லீற்றர் எரிபொருள் மீட்பு

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மன்னாகண்டல் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து 1,590 லீற்றர் எரிபொருள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது

தொடர்ச்சி P2



செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு

# கடும் வரம்பு விதிப்பு

**ஒப்பந்தங்கள் புதுப்பித்தலை மீள அறிவித்தல் வரையிலும் கைவிடுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தல்**

**ஒப்பந்தங்களை நீடிக்கும் முன்னர் திறைச்சேரியின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்**

**கடதாசி பாவனையை கூடுமான வரையில் குறைத்துக்கொள்ளுமாறும் ஜனாதிபதி ஆலோசனை**

நாடு முகம் கொடுத்துக்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து வெற்றிக்கொள்வதற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் அதற்காக அரச செலவுகளைக் கட்டுப்படுத்துமாறும் கட்டளையிட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடும் வரம்புகளை விதிக்குமாறும் பணித்துள்ளார்.

மேற்படி விவகாரம் தொடர்பில், அமைச்சுகளின் செயலாளர்களுக்கு சுற்றறிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் செலவுகள் தொடர்பில் திறைச்சேரியின் சுற்றறிக்கையை கடுமையான முறையில் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவை தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். அரச காரியாலயங்களுக்காக புதிய கட்டடங்களை வாடகைக்கு பெற்றுக்கொடுத்தல் புதிய வாடகைகள் அல்லது வரி ஒப்பந்தங்களுக்குச் செல்லுதல் ஆகியவற்றை மீள அறிவித்தல் வரையிலும் கைவிடுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

அரசியல் பழிவாங்களுக்கு உள்ளாகியோருக்கு

## நட்டஈட்டை வழங்குமாறு மொட்டுக் கட்சி கோரிக்கை

நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல் பழிவாங்களுக்கு உட்படுத்தப்பட்டவர்களுக்கு நட்டஈட்டை வழங்குவதற்கு 117 மில்லியன் ரூபாயை ஒதுக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மொட்டுக் கட்சியினர் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என அறியமுடிகின்றது.

முழுச் செய்தி P5



## 5 நாட்களும் பாடசாலை

அரச மற்றும் அரச அங்கிகாரம் பெற்ற அனைத்து பாடசாலைகளையும் இன்று (15) திங்கட்கிழமை முதல் 5 நாட்களும் திறப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் சனிக்கிழமை (13) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

முழுச் செய்தி P5

வீதியோரத்தில் ஆணின் சடலம்;

## இளைஞர்கள் இருவர் சந்தேகத்தில் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகரின் வீதியோரத்தில் ஆண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இரு இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

முழுச் செய்தி P5

## இந்தியாவின் டோனியர் இன்று இணைகிறது

**ஜனாதிபதி ரணில் நேரடியாகச் செல்கிறார்**



இந்தியாவினால் வழங்கப்பட்ட முதலாவது, டோனியர் விமானம் இன்று (15) இலங்கை விமானப்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது. இலங்கையின் கடல்சார் கண்காணிப்பு திறன்களை அதிகரிப்பதற்காகவே இந்த விமானம் விழக்கப்படவுள்ளது.

புதுடெல்லியில் 2018 ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி நடைபெற்ற இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு உரையாடலின்போது,

தொடர்ச்சி P2

6 அமைப்புகள்: 316 நபர்களின்

## தடை நீக்கம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் ஆட்சிக்காலத்தில் பல அமைப்புகள், நபர்கள் மீது தடைவிதிக்கப்பட்டது. அவ்வாறு விதிக்கப்பட்டிருந்த தடை இந்த அரசாங்கத்தால் நீக்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. புலம்பெயர் தமிழர் அமைப்புகளில் ஆறு அமைப்புகள் மற்றும் அவ்வாறான அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் என இனங்காணப்பட்ட 316 நபர்களின் மீது விதிக்கப்பட்டிருந்த தடையே நீக்கப்பட்டுள்ளது என அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## புதிய இராஜதந்திர அனுமதியுடன் 'யுவான் வாங் 5 கப்பல்' வருகிறது

### பணியாளர்களின் சுழற்சி நடைபெறாது

ஒகஸ்ட் 11 ஆம் திகதியன்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட திட்டமிடப்பட்டிருந்த சீனாவின் 'யுவான் வாங் 5 கப்பல்' இராஜதந்திர பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், ஒகஸ்ட் 16 ஆம் திகதி முதல், ஒகஸ்ட் 22 ஆம் திகதி வரையிலும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடப்படவுள்ளது.

ஒகஸ்ட் 11 முதல் ஒகஸ்ட் 17 வரையிலும், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் எரிபொருளை நிரப்பிக் கொள்ளும் நோக்கத்துக்காக சீனாவின் விஞ்ஞான ஆய்வுக் கப்பலான 'யுவான் வாங் 5'திட்டமிடப்பட்டுள்ளதாக 2022 ஜூன் 28ஆம் திகதிய இராஜதந்திரக் குறிப்பின் மூலம் கொழும்பில் உள்ள சீன மக்கள் குடியரசின் தூதரகம் அமைச்சுக்குத் தெரிவித்தது.

இது தொடர்பில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

தொடர்ச்சி P2



## அபுதாபியில் கைதான புலி முக்கியஸ்தரிடம் விசாரணை

அபுதாபியில் கைது செய்யப்பட்ட, தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கியஸ்தர், கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு, அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என தகவல்கள் தெரிவிக்கின்றன. இவருக்கு எதிராக சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அபுதாபியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

## சிறுமியை விற்க கடத்தியவர் கைது

■ சுமணசிறி குணதிலக

வெல்லவாய-பள்ளிவாசலுக்கு அருகில் வைத்து ஒகஸ்ட் 10ஆம் திகதி காணாமல் போன 5 வயது சிறுமி, பண்டாரவளை வாராந்த சந்தைப் பகுதியில் வைத்து வெல்லவாய பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், யோகட் வாங்கித் தருவதாக தெரிவித்து சிறுமியை



அழைத்துச் சென்ற நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## செஞ்சோலை படுகொலை; உறவினர்களால் அனுஷ்டிப்பு

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்ப்பட்ட வள்ளிபுனம், செஞ்சோலை வளாகத்தில் இலங்கை விமானப் படையினரால் 2006ஆம் ஆண்டு, மேற்கொள்ளப்பட்ட கொடூரமான விமானத் தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் 54 பேர் மற்றும் பணியாளர்கள் ஏழு பேர் உள்ளடங்களாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## நட்டஈட்டை வழங்குமாறு மொட்டுக் கட்சி கோரிக்கை

பிரதமர் அமைச்சின் அலுவலகத்தின் ஊடாக அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்து, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அரசியல் பழிவாங்களுக்கு உட்படுத்தப்பட்ட அரச நிறுவன அதிகாரிகளுக்கு நட்டஈட்டை வழங்குமாறு கோரியுள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அரசியல் பழிவாங்களுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் தொராடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்த அது தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையையும் வழங்கியிருந்தது.

இந்நிலையில், விசாரணை அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ளவர்களுக்கு நட்டஈட்டை வழங்குவதற்கு எதிர்வரும் வாரங்களில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்யப்படலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சிறுமியை விற்க...

காணாமல் போன சிறுமியின் வீட்டில் கூலி தொழில் செய்து வந்த தியத்தலாவை- குருதலாவ பகுதியைச் சேர்ந்த 25 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிறுமியை கடத்திச்சென்ற நபர், வெல்லவாய நகரிலிருந்து பண்டாரவளைக்கு பஸ்ஸில் சென்று அங்கு வாராந்த சந்தைப் பகுதியில் இரவைக் கழித்துள்ளார்.

குருதலாவையிலுள்ள அவரது வீட்டுக்குக் மறுநாள் செல்ல முற்பட்ட போது சந்தைப் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, சிறுமியும் மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமியை பணத்துக்கு விற்பதற்கு சந்தேகநபர் தயாராகி இருந்துள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

## தடை நீக்கம்

ஐ.நா பாதுகாப்புச் சபையின் 1373 மாநாட்டின் கீழ், தற்போது கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட குறித்த ஆறு அமைப்புகளின் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, அவுஸ்திரேலிய தமிழர் பேரவை,- உலகத் தமிழர் பேரவை, உலக திராவிட ஒருங்கிணைப்புக் குழு, திராவிட ஈழ மக்கள் கூட்டமைப்பு, கனேடியத் தமிழர் பேரவை மற்றும் பிரித்தானிய தமிழர் பேரவை ஆகிய அமைப்புகளுக்கான தடையே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இந்த அமைப்புகளின் செயற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பரிந்துரைகளுக்கு அமைய ,கடந்த வெள்ளிக்கிழமை (12) முதல் அமுலுக்கு வரும் வகையில் தடை நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.



## 5 நாட்களும் பாடசாலை

இதேவேளை, பாடசாலைகளுக்கு வெளியேயும் பாடசாலைகளுக்கு உள்ளேயும் நடத்தப்படும் நிகழ்வுகளை வரையறுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## கடும் வரம்பு விதிப்பு

**சமூகத்தில் வறுமையில் வாடும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரச துறையினரும் இயன்றளவு தியாகங்களைச் செய்து முன்னுதாரணமாகத் திகழ வேண்டும்**

அரசாங்கத்தின் தேவைக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கான ஒப்பந்தத்தை நீடிக்கும் முன்னர் திறைச்சேரியின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடதாசி பாவனையை கூடுமான வரையில் குறைத்துக்கொள்ளுமாறும் அதற்காக, மின்னணு தொடர்புசாதனங்களை பயன்படுத்தும் மாற்று வழிகளை கையாளுமாறும் அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

அரச நிறுவனங்களில் எரிபொருள், மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு உள்ளிட்ட சேவைகளை முன்னெடுக்கும் போது ஆகக் கூடுதலான கட்டுப்பாடுகளை பின்பற்றுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், சமூகத்தில் வறுமையில் வாடும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரச துறையினரும் இயன்றளவு தியாகங்களைச் செய்து முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

## இளைஞர்கள் இருவர்...

களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 53 வயதுடைய வல்லிபுரம் அன்பழகன் என்பவரே, லொயிஸ் அவனியூர் வீதியில் உள்ள மதுபான விற்பனை நிலையத்துக்கு அருகில் கடந்த 11ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பாக மட்டக்களப்பு பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான விசாரணையில், அவ்வீதியில் இந்த சி.சி.டி.வி கமெரா சோதனையிட்டது.

அதில் உயிரிழந்தவரை இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து இரு தடவைகள் பொல்லால் தாக்கும் காட்சிகள் பதிவாகியுள்ளதையடுத்து, அந்த இருவரும் அடையாளம் கணப்பட்டனர்.

நகர் பகுதியைச் சேர்ந்த 22, 21 வயதுடைய இளைஞர்கள் இருவரையும் சந்தேகத்தில் நேற்று முன்தினம் (13) கைது செய்ததுடன், சம்பவத்துக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கியும் மீட்டனர்.

சடலமாக மீட்கப்பட்டவர், மதுபோதைக்கு அடிமையாகி, மனைவியைப் பிரிந்து, தாயாருடன் வாழ்ந்து வந்ததுடன், சம்பவ தினம் மதுபான விற்பனை நிலையத்துக்கு அருகில் ஆடையின்றி, வீதியில் கிடந்துள்ளார்.

அந்த வீதியால் மோட்டர் சைக்கிளில் பயணித்த மேற்படி இரு இளைஞர்களும், அங்கு பெண்கள் நடமாடி முடியாமல் இருந்தமையால், மதுபோதையில் விழுந்து கிடந்தவருக்கு ஒரு பாடம் புகட்டுவதற்காகவும் அவரை திருத்துவதற்காகவும் தும்புத்தடி மற்றும் பொல்லால் காலை 8.20 மணிக்கு தாக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

பின்னர் மீண்டும் அந்த வீதியால் திரும்பிவரும் போதும், அவர் அவ்வாறே இருந்துள்ளதை கண்டு, மீண்டும் தாக்கிவிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## இந்தியாவின் டோனியர் இன்று...

இந்தியாவிடமிருந்து இரண்டு டோர்னியர் கண்காணிப்பு விமானங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறித்து இலங்கை அரசாங்கத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை அடுத்து, புதிய விமானங்களை தயாரிப்பதற்கு இரண்டு வருடங்கள் தேவைப்படும் என்பதால், முதலில் ஒரு டோனியர் 228 கடல் கண்காணிப்பு விமானத்தை இந்திய கடற்படையிலிருந்து நன்கொடையாக வழங்க இந்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டது.

அதன் பின்னர், புதிய டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானத்தை நன்கொடையாக வழங்க இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி, இரு நாடுகளுக்கிடையில் பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில், இலங்கை விமானப்படைக்கு மற்றொரு புதிய டோனியர் 228 விமானம், கிடைக்கும் என விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் மேற்பார்வையில் கட்டுநாயக்கா விமானப்படை தளத்தில், இன்று (15) நடைபெறவுள்ள சம்பிரதாய அணிவகுப்பில் முதலாவது டோனியர் விமானம் விமானப்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

## அண்டைய நாடுகளுடனும்...

மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் பாரூக் பர்கி, அதனால்தான், SAARC என்ற அமைப்பின் மூலம் தெற்காசியாவில் பிராந்திய இணைப்புக்கு பாகிஸ்தான் வலுவான ஆதரவாளராக தொடர்ந்து இருந்து வருகிறது என்றார்.

இலங்கையிலுள்ள பாகிஸ்தான் சமூகத்தினருடன் இணைந்து பாகிஸ்தானை வலுவான, ஆற்றல்மிக்க, முற்போக்கான, சகிப்புத்தன்மை மற்றும் ஜனநாயக இஸ்லாமிய நலன்புரி நாடாக மாற்றுதல் என்ற தொனிப்பொருளில் பாகிஸ்தானின் சுதந்திரத்தின் 75 ஆவது ஆண்டு விழாவை நேற்று (14) கொண்டாடியது.

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் ஸ்தானிகர், மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் பாரூக் பர்கி, பாகிஸ்தான் தேசிய கீதம் இசைக்கப்படும் வேளையில் பாகிஸ்தானின் தேசியக் கொடியை ஏற்றி இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அதன்பின்னர் அவர் உரையாற்றுகையில், “ஓகஸ்ட் 14 என்பது சந்தோசத்தின் நாளாகும். எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு நன்றியுடன் தலை வணங்கும் நாளாகும். பாகிஸ்தான் உருவாக்கத்தின் நோக்கங்களுக்காக ஒற்றுமை, நம்பிக்கை மற்றும் ஒழுக்கத்துடன் தொடர்ந்து பணியாற்றுவோம் என்ற உறுதிமொழியை புதுப்பிக்கும் நாளாகும். இன்று நாம் எமது முன்னோர்களையும் தியாகிகளையும் நினைவு கூர்வதுடன், சுதந்திரமான தாயகத்தை எமக்கு வழங்குவதற்கு அசாதாரண தியாகங்களைச் செய்தமைக்காக அவர்களுக்கு எமது நன்றிகளை செலுத்துகின்றோம் என்றார்.

பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் சார்க் அமைப்பின் முக்கிய அங்கத்தினர்கள். மேலும், இரு நாடுகளும் அவை உருவானதில் இருந்து வலுவான நட்பு மற்றும் சகோதரத்துவப் பிணைப்பைப் பகிர்ந்து கொள்கின்றன” என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கொழும்பு துறைமுகத்துக்கு வந்திருக்கும் பாகிஸ்தான் கடற்படைக்கு சொந்தமான PNS Taimur கப்பலின் அதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## அபுதாபியில் கைதான புலி...

இலங்கையிலிருந்து சென்ற பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் அதிகாரிகளே, இராசநாயகம் தவனேசன் (48 வயது) என்பவரே கைது செய்யப்பட்டு, கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என்றும் அறியமுடிகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலக்கட்டத்தில், கொழும்பு மற்றும் பல பகுதிகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கள் தொடர்பாக, குறித்த நபர் தேடப்பட்டுவந்தவர் என்றும், இறுதி யுத்த காலப்பகுதியில் நாட்டிலிருந்து தப்பிச் சென்ற புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர் பட்டியலில் இவரும் இருகிறார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட சந்தேக நபரிடம் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் சிறப்புக் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

## செஞ்சோலை படுகொலை;...

இந்தச் சம்பவத்தின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், தமிழர் பிரதேசங்கள் மற்றும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெளிச்சியுடன் நேற்று (14) அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த வகையிலே, விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட செஞ்சோலை வளாகத்தில், நேற்றுக் காலை நினைவேந்தல் நிகழ்வு, குறித்த விமானத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பிள்ளைகளின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் இதில் இணைந்து, செஞ்சோலை வளாகத்தில் பொதுச்சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தி உணர்வெளிச்சியுடன் அக வணக்கம் செலுத்தினர்.

## 1,590 லீற்றர்...

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் குறித்த விடயம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாக தெரிவித்துள்ளனர்

## புதிய இராஜதந்திர அனுமதியுடன் ‘யுவான் வாங்...

குறித்த துறைமுக விஜயத்தின் போது பணியாளர்களின் சுழற்சி எதுவும் நடைபெறாத நிலையில், சீன மக்கள் குடியரசின் தூதரகத்தின் கோரிக்கைக்குத் தேவையான உதவி மற்றும் சாத்தியமான பரிசீலனையை வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

‘இராஜதந்திர அனுமதி’ போன்ற கோரிக்கைகள் தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு அமைவாக, பாதுகாப்பு அமைச்சு, இலங்கை கடற்படை மற்றும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு போன்ற அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் ஒப்புதலுக்காக அமைச்சு மேற்படி கோரிக்கையை அறிவித்தது.

குறிப்பிட்ட காலப்பகுதியில் எரிபொருள் நிரப்புதல் நோக்கங்களுக்காக கப்பல் வருகை தருவதற்கான பாதுகாப்பு அனுமதி 2022 ஜூலை 07ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சிடமிருந்தும், குறுக்கீடு மற்றும் பாதுகாப்பற்ற அடிப்படைக்கு உட்பட்ட அதிர்வெண்கள் மற்றும் தொடர்பாடல் உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான தடையில்லாக் கடிதம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடமிருந்தும் பெறப்பட்டது.

அதனை தொடர்ந்து, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் எரிபொருள் நிரப்பும் நோக்கத்துக்காக விஜயம் செய்வதற்கான இராஜதந்திர அனுமதி 2022 ஜூலை 12ஆநம் திகதி அமைச்சினால் சீன மக்கள் குடியரசின் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டது.

இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்துக்குள் தானியங்கி அடையாள அமைப்பு இயங்கி முறைமையைப் பேணுதல் மற்றும் இலங்கை கடற்பரப்பில் எந்த விஞ்ஞான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படலாகாது போன்ற பாதுகாப்பு அமைச்சினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிபந்தனைகளும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அமைச்சிடம் எழுப்பப்பட்ட சில விடயங்களின் அடிப்படையில், இந்த விடயம் தொடர்பான மேலதிக ஆலோசனைகள் மேற்கொள்ளும் வரை, ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கான கப்பலின் விஜயத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை அரசாங்கம் 2022 ஓகஸ்ட் 05ஆம் திகதியிட்ட இராஜதந்திரக் குறிப்பின் மூலம் சீன மக்கள் குடியரசின் தூதரகத்தைக் கோரியது.

இந்த விடயத்தை நட்பு ரீதியாக, பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஆக்கபூர்வமான உரையாடலின் மூலமாக, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் நலன்களையும் கருத்தில் கொண்டு, அரசுகளின் இறையாண்மை சமத்துவக் கொள்கைகளுக்கு ஏற்ப தீர்க்கும் நோக்கில், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் இராஜதந்திர வழிகள் மூலமான உயர் மட்ட ஆலோசனைகளில் அரசாங்கம் விரிவாக ஈடுபட்டுள்ளது.

எழுப்பப்பட்ட கவலைகளின் அடிப்படையில், அமைச்சு இந்த விடயத்தில் ஆலோசனைகளுக்கு உதவக்கூடிய மேலதிக தகவல்களையும், ஆவணங்களையும் கோரியது.

யுவான் வாங் 5 கப்பல் 2022 ஓகஸ்ட் 16ஆம் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், 16 முதல் 22 ஓகஸ்ட் 2022 வரையான காலப்பகுதியிலான புதிய திகதிகளில் எரிபொருள் நிரப்பும் நோக்கங்களுக்காக அனுமதி கோரி விண்ணப்பித்ததாகவும், இராஜதந்திரக் குறிப்பின் மூலம் சீன மக்கள் குடியரசின் தூதரகம் 2022 ஓகஸ்ட் 12ஆம் திகதி அமைச்சிற்குத் தெரிவித்தது.

அனைத்து ஆவணங்களையும் கருத்தில் கொண்டு, 2022 ஓகஸ்ட் 16 - 22 வரை கப்பல் வருகை தருவதற்கான அனுமதி சீன மக்கள் குடியரசின் தூதரகத்திற்கு 2022 ஓகஸ்ட் 13ஆந் திகதி தெரிவிக்கப்பட்டது.

அனைத்து நாடுகளுடனுமான இலங்கையின் ஒத்துழைப்பு மற்றும் நட்புறவுக் கொள்கையை மீண்டும் வலியுறுத்துவதற்கு அமைச்சு விரும்புகின்றது.

சுற்றுப்புறப் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கே அதிக முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. இலங்கையின் சர்வதேசக் கடமைகளுக்கு அமைவாக, அனைத்து நாடுகளினதும் நியாயமான நலன்களைப் பாதுகாப்பதே அதன் நோக்கமாகும்.

குறிப்பாக, தற்போதைய காலகட்டத்தில் கடுமையான பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள மற்றும் இலங்கை மக்களின் நலன்களை உறுதிப்படுத்தும் பல உள்நாட்டு செயன்முறைகளில் ஈடுபட்டுள்ள நிலையில், அனைத்து நாடுகளினதும் ஆதரவு, ஒற்றுமை மற்றும் புரிந்துணர்வை அமைச்சு ஆழமாகப் பாராட்டுகின்றது.

# ‘மனிதநேய ஒன்றிணைவு’



படத்தில், இடமிருந்து வலமாக சர்வோதய சிரமதான இயக்கத்தின் தலைவர் டொக்டர் வின்யா ஆரியரத்ன, Huawei Technologies Lanka Pvt Ltd நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி Liang Yi, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதான தொழில்நுட்ப அதிகாரி பிரதீப் டி அல்மேடா, Huawei Technologies Lanka Pvt Ltd நிறுவனத்தின் சிரேஷ்ட தயாரிப்பு தீர்வு முகாமையாளர் காவிந்த மஞ்சுள ஆகியோர் காணப்படுகின்றனர்.

Huawei, இலங்கையில் பல தனியார் துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் ‘மனிதநேய ஒன்றிணைவு’ அவசரகால நிவாரண திட்டத்துடன் கைகோர்க்கிறது.

பாதிக்கப்பட்ட 200,000 அதிகளவான குடும்பங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் நோக்கில் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, விநியோக பங்காளியாக சர்வோதய சிரமதான சங்கம், சுயாதீன கணக்காய்வாளர் PwC ஸ்ரீ லங்கா ஆகியவற்றால் நிறுவப்பட்ட இந்த மனிதநேய ஒன்றிணைவு செயற்றிட்டத்திற்கு CBL Group, Citi, Sunshine Holdings PLC, Huawei Technologies Lanka Co ஆகியவையும் பின்னர் படிப்படியாக இணைந்துகொண்டன.

சமூக நல்வாழ்வை இலக்காகக் கொண்ட பங்காளர்களுடன் இணைந்து செயற்படுத்தப்படும் ‘மனிதநேய ஒன்றிணைவு’ செயற்றிட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த 200,000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதே இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும். தற்போது 25 மாவட்டங்களிலும் அவசரகால நிவாரணங்கள் விநியோகிக்கப்படுவதுடன் மேலும் 100,000 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை இந்த ‘மனிதநேய ஒன்றிணைவு’ நிவாரண திட்டமானது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

“இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் இயங்கி வரும் ஒரு நிறுவனம் என்ற வகையில், Huawei, இலங்கை எப்போதும் சவால்களை வெற்றிகொள்ளக்கூடிய வரலாற்று புகழை கொண்ட அழகான தேசம் என்று உறுதியாக நம்புகிறது. இலங்கைக்குள் இலங்கைக்கான எங்கள் அர்ப்பணிப்பு என்ற வகையில், இந்தச் சவாலான நேரத்தில் இலங்கை மக்களுடன் நாங்கள் என்றும் ஒன்றாக இணைந்து நிற்கிறோம். எனவே, தற்போதைய நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை ஆதரிப்பதற்காக எங்கள் மூலோபாய பங்காளிகளான டயலொக் ஆசிஆட்டாவுடன் கைகோர்க்க முடிவு செய்தோம். இலங்கை விரைவில் ஒரு நிலையான மற்றும் வளமான எதிர்காலத்திற்கு கொண்டு செல்லப்படும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்” என்று Huawei Sri Lanka இன் பிரதம நிறைவேற்று அதிகாரி Liang Yi தெரிவித்தார்.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இன் குழும தலைமை தொழில்நுட்ப அதிகாரி பிரதீப் டி அல்மேடா கருத்து தெரிவிக்கையில், “மனிதநேய ஒன்றிணைவு மனிதாபிமான செயற்றிட்டத்திற்கு, நாடளாவிய ரீதியில் பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் இந்தத் திட்டத்தில் இணைந்து கொண்டமைக்காக, அனைத்து பங்காளிகள் சார்பாக, Huawei க்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். 200,000க்கும் மேற்பட்ட குடும்பங்களை ஆதரிப்பதே எங்கள் இலக்காகும். மேலும் இந்த இலக்கை அடைய சமூக நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட பிற நிறுவனங்களையும் எங்களுடன் இணைந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஒற்றுமையின் மூலம் எங்களால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்களின் விருப்பமான டிஜிட்டல் பங்காளியாக, எங்கள் சமூகத்தின் தேவையின் போது அவர்களுக்கு ஆதரவளிப்பது எங்கள் பொறுப்பு என்றும் நாங்கள் எப்போதும் நம்புகிறோம்” என்றார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள நமது சொந்த மக்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதற்கான கூட்டு முயற்சியில் இணையுமாறு ஏனைய அனைத்து பெருநிறுவனங்களுக்கு மனிதநேய ஒன்றிணைவு அழைப்பு விடுக்கின்றது. அனைவரும் தங்களின் கிரெடிட்/டெபிட் கார்ட், வங்கி வைப்பு eZ Cash, Star Points, genie அல்லது 0776 421421 என்ற இலக்கத்திற்கு Top up செய்வதன் மூலம் இணைந்துகொள்ள முடியும். நன்கொடை வழங்குதல் தொடர்பாக செயல்முறை பற்றிய மேலதிக தகவல்களுக்கு https://dlg.lk/don_E க்கு செல்லுங்கள்.

மனிதநேய ஒன்றிணைவு பற்றிய மேலதிக தகவல்களுக்கு https://dlg.dialog.lk/manudam-mehewara க்கு செல்லுங்கள்.

மனிதநேய ஒன்றிணைவு
Sarvodaya | Dialog | MAS | HEMAS
CBL | citi | sunshine | HUAWEI

22ஆவது திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி

# நீதிமன்றத்தை நாட முடியும்

நதீக தயா பண்டார

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலத்தை அரசியலமைப்புக்கு அமைய உயர்நீதிமன்றத்தில் எவருக்கும் சவாலுக்கு உட்படுத்த முடியும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 22ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக ஏழு நாள்களுக்குள் எவரும் உயர்நீதிமன்றத்துக்கு செல்லலாம். உயர்நீதிமன்றமும் அது தொடர்பில் மூன்று வாரக் காலத்துக்குள் அச்சட்டமூலம் தொடர்பான வியாக்கியானத்தை பாராளுமன்றத்துக்கு வழங்கும் எனவும் தெரிவித்தார்.

வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக கண்டிக்கு நேற்று முன்தினம் (13) சென்றிருந்த நீதி அமைச்சர் ஊடகங்களை சந்திக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்புக்கு முரணாக 22ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கங்கள் எதுவும் இருந்தால், அதைத் திருத்திக்கொண்டு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இச்சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் எனவும் கூறினார்.




சர்வகட்சி அரசாங்கத்துக்கும், 22ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை. எப்போது வேண்டுமானாலும் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியும் எனவும் கூறினார்.

சர்வகட்சி அரசாங்கத்துக்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்தால், பெரும்பான்மையான கட்சிகளைக் கொண்டு, சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியும். சீனாவின் கப்பலால் சர்வதேச பிரச்சினைகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நான்கு கால்களுடன்

## அதிசய கோழிக் குஞ்சு

செந்தூரன் பிரதீபன்



அச்சுவேலி, காலானை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கோழிக்குஞ்சு ஒன்று நான்கு கால்களுடன் பொரித்துள்ளது.

மகாராஜா கௌரி என்ற குடும்பப் பெண், கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றார். கோழி வளர்ப்பையே அவர் வாழ்வாதாரமாக மேற்கொண்டு வருகின்றார்.

இவர் அண்மையில் 10 முட்டைகளை வாங்கி, கோழி ஒன்றின் மூலம் அடைவைத்துள்ளார். ஆறு குஞ்சுகளில் இறுதியாக பொரித்த குஞ்சு, நான்கு கால்களுடன் காணப்படுகின்றது.

ஏனைய கோழிக் குஞ்சுகளைப் போல, குறித்த கோழிக் குஞ்சும் சுறுசுறுப்பாக ஓடுவதுடன், இரையை நன்றாக கொத்துகின்றது.

குறித்த கோழிக்குஞ்சை பிரதேசத்தில் உள்ள மக்கள் அதிசயமாக பார்வையிட்டு வருகின்றனர்.

## ராஜபக்ஷர்களே இயக்குகின்றனர்



தற்போதைய அரசாங்கமும் பசில் ராஜபக்ஷவுக்கு வேண்டியவாறே செயற்பட்டு வருவதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, ராஜபக்ஷர்களின் வேலைத்திட்டங்களே தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் நெருக்கடி நிலைமைகளைத் தீர்ப்பதற்கு, ஜனாதிபதி சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார். அவ்வாறு சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமையுமாக இருந்தால் அது உண்மையில் நல்லது. ஆனால், சர்வகட்சி அரசாங்கத்தின் காலம் எவ்வளவு? யார் இந்த அரசாங்கத்தில் இருக்கப்போகிறார்கள்? அதன் வேலைத்திட்டம் என்ன என்பதை அறிவிக்காமல் திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனால் சர்வகட்சி அரசாங்கத்தின் அழைப்பை சில கட்சிகள் புறக்கணித்துள்ளன.

அனைவரும் ஒன்றிணைந்தால் மாத்திரமே சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும். அதனை செய்யாது நபர்கள் அரசாங்கத்துடன் இணைவதால் அது சர்வகட்சி அரசாங்கமாக இருக்காது.

ராஜபக்ஷர்களின் வேலைத்திட்டத்தையே தற்போதைய அரசாங்கமும் செய்து வருகிறது. இந்த அரசாங்கத்தின் பின்னணியிலும் பசில் ராஜபக்ஷ இருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

## QR முறையை மீறினால் சட்டநடவடிக்கை



எரிபொருளுக்கான தேசிய அனுமதிப் பத்திரத்துக்கு புறம்பாக, எரிபொருளை விநியோகிக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை, நிர்வாக ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் வழங்கப்படும் எரிபொருளின் அளவு, QR முறையின் கீழ் விநியோகிக்கப்படும் எரிபொருளின் அளவு தொடர்பான இருவார தரவுகள் ஆராயப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகள், பொதுப்போக்குவரத்து, கடற்றொழில், விவசாயம், சுற்றுலாத்துறை உள்ளிட்ட துறைகளை முன்னிலைப்படுத்தி எரிபொருளை விநியோகிக்கும் செயற்பாடுகள் தொடர்பிலும், பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விநியோகம் தொடர்பில் கொலன்னாவை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அமைச்சர் காஞ்சன விஜேசேகர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலின்போது, பாராளுமன்ற உறுப்பினர்களான இந்திக அநுருத்த, சுரேன் ராகவன், மதுர விதானகே ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மனித – யானை மோதல்கள்

## அடுத்த வருடம் நிறைவுக்கு வரும்

மனித - காட்டு யானை மோதலுக்கு தீர்வுக் காணும் வகையில் மின்சார வேலிகள் அமைக்கப்பட வேண்டிய அனைத்து மாவட்டங்களுக்கும் அடுத்த வருடத்துக்குள் மின்சார வேலிகளை அமைக்க கமத்தொழில் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தீர்மானித்துள்ளார்.

மனித - காட்டு யானை மோதலை அடுத்த வருடம் நிறைவுக்குக் கொண்டுவருவதற்காக அனைத்து விவசாய அமைப்புகளுடனும் கலந்துரையாடி இணக்கப்பாடொன்றுக்கு வர வேண்டும் எனவும், அதற்கான வேலைத்திட்டங்களை உடனடியாக வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆரம்பிக்க வேண்டும் எனவும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களில் மனித - யானை மோதல் அதிகரித்துள்ளது. இதன்போது மனித - யானை மோதலால் 2019ஆம் ஆண்டு 407 யானைகளும் 122 மனிதர்களும், 2020ஆம் ஆண்டு 328 யானைகளும் 112 மனிதர்களும் உயிரிழந்துள்ளனர். அதுபோல 2021ஆம் ஆண்டு 375 யானைகளும் 142 மனிதர்களும் உயிரிழந்துள்ளதாக வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கிறது.



## சர்வகட்சி அரசாங்கத்துக்கு சுதந்திரக் கட்சி முழு ஆதரவு

ஷேன் செனவிரத்ன

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அமைக்கப்படும் சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முழு ஒத்துழைப்பை வழங்கும் எனத் தெரிவிக்கும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி, குறைந்த எண்ணிக்கையிலான அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அமைச்சரவையில் நியமிக்கப்பட உள்ள அமைச்சர்கள் ஊழல், குற்றச்சாட்டு இல்லாதவர்களாக இருக்க வேண்டும் எனவும் தயாசிறி மேலும் தெரிவித்தார்.

கண்டி, ஸ்ரீ தலதாமாளிகைக்கு வழிபாடுகளுக்காக நேற்று முன்தினம் (13) சென்றிருந்த நிலையில், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார ரீதியாக நாடு ஸ்திரமான நிலைக்கு வர வேண்டும் என்றால், அரசியல் ஸ்திரத்தன்மை முதலில் ஏற்படுத்தப்பட வேண்டும். அதனால் சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஒத்துழைப்பை வழங்கும். எனினும், சர்வகட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கான கோரிக்கைகள் எதையும் சுதந்திரக் கட்சி இதுவரையில் முன்வைக்கவில்லை.



பல வருடங்களாக நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் நட்டத்தை பொதுமக்கள் மீது சுமத்தாது, அந்நிறுவனங்களை இலாபத்தில் இயங்குவதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், நீர் வழங்கல் நீர் விநியோக சபை ஆகிய நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கினாலும் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை அதன் ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படுவதால் அச்சுமையை பொதுமக்கள் சுமக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

தேசிய சபை ஒன்றை ஸ்தாபித்து அனைத்துக் கட்சி தலைவர்களையும் அதில் உள்ளடக்கி பொருளாதார வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## கொள்கலனை திருடிய இருவர் சிக்கினர்

பேருவளை, ஹல்கந்தவில பிரதேசத்தில் உள்ள வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான கொள்கலனை இரவில் திருடிச் சென்ற இருவரை பயாகல பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் வர்த்தகருக்குச் சொந்தமான 7 இலட்சம் பெறுமதியான கொள்கலனை, கனரக வாகனத்தைப் பயன்படுத்தி இரவில் சூட்சுமமான முறையில் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பயாகல பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, சிசிரிவி கமெராக்களின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டிருந்த பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர்.

இதேவேளை இத்திருட்டுச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட கனரக வாகனத்தை, பிரதான சந்தேகநபர் ஒன்லைன் ஊடாக பெற்றுக்கொண்டுள்ளார்.

## மகனின் கழுத்தில் கத்தியை வைத்த தந்தை கைது



வெளிநாடு சென்றுள்ள தனது மனைவி நாட்டுக்கு திரும்பி வர வேண்டும்; இல்லை என்றால் குழந்தையை கொன்றுவிடுவேன் என அச்சுறுத்திய தந்தையை குளியாப்பிடிய பொலிஸார் நேற்று (14) கைது செய்துள்ளனர்.

வெளிநாடு சென்றுள்ள தனது மனைவி நாட்டுக்கு திரும்பி வரவேண்டும்; இல்லை என்றால் தனது 5 வயது மகனைக் கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக மகனின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியிருந்த தந்தை, அதனை வீடியோ எடுத்து வெளிநாட்டில் உள்ள மனைவிக்கு அனுப்பியுள்ளார்.

இந்த வீடியோ சமூகவலைத்தளத்தில் அதிகமாக பகிரப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து குறித்த பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்பியிருந்த வெளிநாட்டு முகவர் நிலையம், இச்சம்பவம் தொடர்பில் குளியாபிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தது.

இதேவேளை, சிறுவனின் கழுத்தில் கத்தியால் அழுத்தியதால் ஏற்பட்ட காயங்களுக்காக சிறுவன் தற்போது குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

தனது பாட்டியிடம் தன்னை ஒப்படைக்க வேண்டும் எனவும், தனது தந்தையிடம் தன்னை ஒப்படைக்க வேண்டாம் எனவும் சிறுவன் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நீர் வழங்கல் திட்டத்துக்கு விநியோகிக்கப்பட்ட

# கறை படிந்த சிவப்பு நீர்

## வீண்விரயத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும்

■ எம்.எல்.எஸ்.டீன்



அக்கரைப்பற்று பிராந்திய நீர் வழங்கல் காரியாலயத்துக்குட்பட்ட அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை நீர் வழங்கல் திட்டத்துக்கு வெள்ளிக்கிழமை (12) மாலை முதல் நேற்று முன்தினம் (13) மாலை வரை, அப்பகுதி நீர்ப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட கறை படிந்த சிவப்பு நிற நீரால், பல்லாயிரக்கணக்கான நீர் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை, கொண்டவட்டுவான் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை நீர் வழங்கல் திட்டங்களுக்கு வழங்கப்படும் குடி நீரே கறை படிந்த பாவிக்க முடியாத நீராக வழங்கப்பட்டுள்ளது.

இந் நிலையால், நீர் பாவனையாளர்கள் அனைவரும் பெரிதும் பாதிக்கப்பட்டு, செய்வதறியாது குடிப்பதற்கோ தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ முடியாமல் திண்டாடினார்கள்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் தற்போது முற்று முழுதாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நீரை நம்பியே மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு இருக்கின்ற நிலையில், கடந்த இரண்டு நாள்கள் நிலவிய இந்த நிலைமையானது பாரிய அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் பல இலட்சக் கணக்கான லீற்றர் நீர் பாதைகளிலும், இருப்பிடங்களிலும் திறந்து விடப்பட்டது. இது பொதுமக்களின் நீர் கணக்குகளிலேயே கழிக்கப்படவுள்ளது.

எனவே, இந்தச் செயற்பாட்டை உடனடியாக விசாரணை செய்து, நீர் பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு, உரிய அதிகாரிகளிடமும் அமைச்சரிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீனவர்களுக்கு

# மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை

■ எம்.எஸ்.எம். ஹனீபா



அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக, கல்முனை ஆழ்கடல் மீனவ சங்கத்தின் தலைவர் எம்.ஏ.எம். நசீர், நேற்று (14) தெரிவித்தார்.

இது தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடற்றொழிலாளர்கள் தமது தொழிலை மேற்கொள்வதற்குத் தேவையான மண்ணெண்ணெய், டீசல் என்பவற்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக நிலவி வருகின்ற எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, கடற்றொழில் வெகுவாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் மீனவர்கள் வாழ்வாதாரம் இழந்து, நிர்க்கதி அடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் வாரம் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதால் முன்னுரிமை அடிப்படையில் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதற்கு மாவட்டச் செயலாளர், மீன்பிடித் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகிக்காமல் மீனவர்களின் தேவைக்கு ஏற்ப எரிபொருளை வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.



# ஹெரோய்னுடன் வியாபாரி கைது

## பணமும் மீட்பு

■ ரீ.எல்.ஜவ்பர்கான், எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள விக்டரி மைதானத்தின் அருகில் வைத்து ஹெரோய்ன் போதைப்பொருளை விற்பனை செய்து கொண்டிருந்த வியாபாரியொருவர், களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் (13) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிமிருந்து 6 கிராமும் 690 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மற்றும், போதைப்பொருளை விற்பனை செய்தக் கிடைத்த 21,000 ரூபாய் பணம் என்பவற்றையும் மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து, பொறுப்பதிகாரி ஐ.பி.தென்னக்கோன் தலைமையிலான களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினர் விசேட சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.



இளைஞர்கள் எதிர்கொள்ளும்

# பிரச்சினைகள்; கலந்துரையாடல்

■ அ.அச்சுதன்

இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான வழிகாட்டல் கலந்துரையாடல், திருகோணமலை மாவட்ட அரச சார ஒன்றியத்தின் தலைவர் டொக்டர் என்.ரவிச்சந்திரன் தலைமையில், திருகோணமலை சர்வோதய நிலையத்தில் நேற்று முன்தினம் (13) நடைபெற்றது.

இந்தச் செயலமர்வு, இளைஞர் அபிவிருத்தி அகத்தின் இளைஞர் திட்டப் பிரிவு மற்றும் மாவட்ட அரச சார்பற்ற ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் இணைப்பாளர் பொ. சற்சிவானந்தனின் நெறிப்படுத்தலில், 20 பேர் வரை இதில் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் பிரதேச சபை உறுப்பினர், மூவின சமூகத்தையும் சார்ந்த புத்திஜீவிகள், மத குருமார்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் பங்குபற்றியிருந்தனர்.

கட்டுப்பாட்டு விலை அமல்

# இழுபறிக்கு சுமூகத் தீர்வு

■ அஸ்லம் எஸ்.மௌலானா



கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாட்டிறைச்சியை கட்டுப்பாட்டு விலைக்கு விற்பதில் நிலவி வந்த இழுபறி நிலைக்கு சுமூகமான தீர்வு காணப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து நேற்று (14) அனைத்து மாட்டிறைச்சிக் கடைகளும் திறக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மாட்டிறைச்சி வியாபாரிகள் மற்றும் மாடு விநியோகஸ்தர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் இத்தீர்வு எட்டப்பட்டதாக மாநகர மேயர் ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாட்டிறைச்சியின் விலை முறையற்ற விதத்தில் அதிகரிக்கப்பட்டிருப்பதால், மக்கள் அதைக் கொள்வனவு செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதை கருத்தில்கொண்டு, 01 கிலோ கிராம் மாட்டிறைச்சி (200 கிராம் எலும்பு அடங்கலாக) 1,600 ரூபாய்க்கும் தனி இறைச்சி 1,800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என மேயரால் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

எனினும், கட்டுப்பாட்டு விலையை அமல்படுத்துவதில் மாநகர சபைக்கும் இறைச்சிக் கடைக்காரர்களுக்குமிடையே இழுபறி காணப்பட்டு வந்தது.

இதனால் பெரும்பாலான இறைச்சிக்கடைகள் 06ஆம் திகதி முதல் திறக்கப்படாமல் இருந்தால் நுகர்வோர் மாட்டிறைச்சியை கொள்வனவு செய்ய முடியாமல் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.



செஞ்சோலை படுகொலையின்

# பதினாறாம் நினைவேந்தல்

■ சண்முகம் தவசீலன்

2006ஆம் ஆண்டு, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட வள்ளிபுனம், செஞ்சோலை வளாகத்தில் இலங்கை விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான விமானத் தாக்குதலில், பாடசாலை மாணவர்கள் 54 பேர் மற்றும் பணியாளர்கள் ஏழு பேர் உள்ளடங்கலாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் நேற்று (14) அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த வகையில், வள்ளிபுனம் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்றுக் காலை நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

விமானத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பிள்ளைகளின் உறவினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் இணைந்து, இந்த நினைவேந்தல் நிகழ்வை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டித்தனர்.



# யாழ். பல்கலைக்கழகத்திலும் நினைவேந்தல் அனுஷ்டிப்பு

■ வி.நிதர்ஷன்

செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் உயிரிழந்த பாடசாலை மாணவர்களின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல், யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான தூபியில் நேற்று (14) காலை 11:30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்பொழுது படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நினைவுருவ படங்களுக்கு ஈகைச் சுடரேற்றப்பட்டதோடு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு, ஒரு நிமிட அகவணக்கமும் மாணவர்களால் செலுத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, இந்தப் படுகொலை தொடர்பான நினைவுரையும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜகுமாரால் நிகழ்த்தப்பட்டது.

இதன்போது யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் பிரதிநிதிகள், மாணவர்கள், பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நினைவேந்தல்

■ விஜயரத்தினம் சரவணன்

செஞ்சோலை வளாகப் படுகொலையின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, முல்லைத்தீவு, கள்ளப்பாடு வடக்குப் பகுதியில் அமைந்துள்ள முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நேற்று (14) நடைபெற்றது.

2006ஆம் ஆண்டு வள்ளிபுனம், செஞ்சோலை வளாகத்தில் இலங்கை விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான விமானத் தாக்குதலால் பாடசாலை மாணவிகள் 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட மாணவியர்களுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தி நினைவேந்தல் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

இந்த அஞ்சலி நிழ்வில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

நல்லூர் உற்சவம் தொடர்பில்

# பழைய செய்தி போலியாக வருகிறது

■ வி.நிதர்ஷன்

நல்லூர் கோவில் உற்சவம் தொடர்பில் உண்மைக்குப் புறம்பான சிறுபிள்ளைத்தனமான கருத்துகளை ஊடகங்களுக்குத் தெரிவிக்கும் யாழ். மாநகர பிரதி மேயர் து.ஈசன் தொடர்பாக யாழ். மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் சபையில் கண்டனம் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், "2020 ஆம் ஆண்டு ஆர்னோல்ட், மாநகர மேயராக இருந்தார். அவர் நல்லூர் பெருந்திருவிழா காலத்தில் வெளிநாட்டுக்கு பயணமானதால் மாநகரத்தின் பதில் மேயராக பிரதி மேயர் து.ஈசன் பதவி வகித்தார். அப்போது நல்லூர் கோவில் திருவிழா தொடர்பில் ஊடக சந்திப்பை நடத்தியிருந்தார். அச்சந்திப்பில், "கொரரோனா தொற்றுக் காரணமாக காவடிகள் அங்க பிரதட்டை உட்பட எந்த ஒரு நேர்த்திக்கடன்களையும் செய்ய முடியாது; அன்னதானம் வழங்க முடியாது" என்று கூறியிருந்தார்.

"2020 ஆண்டு நடத்திய குறித்த செய்தியாளர், மாநாட்டின் காணொளியை இம்முறை நல்லூர் திருவிழா காலத்தில் தன்னுடைய முகப்புத்தகம் வாயிலாக மீண்டும் பகிர்ந்திருக்கின்றார். இதன் மூலம் மக்களிடத்தில் குழப்பநிலையை உருவாக்கின்றார்.

"நல்லூர் கந்தப் பெருமான் வெளிவீதி வருவதற்கும் மாநகர மேயருக்கும் என்ன சம்மந்தம் இருக்கின்றது. அந்தப் புரிதல் கூட இல்லாமல் ஒரு மாநகரத்தின் பிரதி மேயர் செயற்படுவது நகைப்பிற்குரியது" என்றார்.



சாதாரண தர மாணவர்களுக்கு

# இலவச கருத்தரங்கு

■ வி.நிதர்ஷன்



கல்வி பொதுத் தராதர சாதாரண தர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று (14) நடைபெற்றது.

வட மாகாணத்திலுள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் சட்டத்தரணி வேலாயுதம் தேவசேனாதிபதியின் கொழும்பு அருள் கல்வி வட்டத்தின் அனுசரணையுடன், இந்தக் கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு, கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்.

இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றிய மாணவர்களுக்கு கடந்த கால சாதாரண தர வினாத்தாள்கள், விடைகள் அடங்கிய புத்தகம் இலவசமாக வழங்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கருத்தரங்கில் பங்கேற்பதற்காக மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கருத்தரங்கு தொடர்ச்சியாக வட மாகாணத்தில் இடம்பெற்று வருகின்ற நிலையில், இன்று (15) கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திலும் நாளை செவ்வாய்க்கிழமை (16) மாங்குளத்தில் அமைந்துள்ள மாகாண தொழில்நுட்பக் கல்லூரியிலும் புதன்கிழமை (17) முல்லைத்தீவு ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபத்திலும் வியாழக்கிழமை (18) மன்னார் நகர சபை மண்டபத்திலும் வெள்ளிக்கிழமை (19) வவுனியா நகரசபை மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.



# இந்தியா அசுர வளர்ச்சி பெறுகின்றது



இந்தியா தனது 75ஆவது சுதந்திர தினத்தை இன்று (15) கொண்டாடுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில், இந்திய நாட்டை தலைமையேற்று, சிறப்பாக நிர்வகித்து வருகின்ற பிரதமர் நரேந்திர மோடி உட்பட இந்திய நாட்டின் அனைவருக்கும், மலையக மக்களின் சார்பாக, எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அயல்நாடான இந்தியா, எமது நாட்டுக்கு எப்போதெல்லாம் இன்னல்கள் ஏற்பட்டதோ, அந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஓர் உற்ற நண்பனாக, ஒரு சிறந்த வழிகாட்டியாகச் செயற்பட்டு, எங்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்துவருகின்ற, மிகச் சிறந்த வழிகாட்டியாகும்.

இந்தியா எமக்கு எப்பொழுதுமே செய்கின்ற அனைத்து உதவிகளில் அநேகமானவை, நன்கொடைகளாகவே கிடைத்திருக்கின்றது.

எனவே, இன்றைய இந்த நாளில், இந்திய நாட்டுக்கும் மலையக மக்களின் தொப்புள் கொடி உறவுகளுடன் நாம் இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்றோம். நாம் இலங்கையர்களாக இருந்தாலும் இந்தியாவில் இருந்து வருகை தந்த பொழுது, அங்கிருந்து கொண்டு வந்த அனைத்து கலை கலாசாரத்தையும் இன்றும் பாதுகாத்து வருகின்றோம் என்றும் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினருக்கும் பங்கு உண்டு



இந்தியாவின் 75ஆவது ஆண்டு சுதந்திர தின விழா சிறப்புபெற, இலங்கையில் வாழும் தொப்புள் கொடி உறவுகளான இந்திய வம்சாவளி மக்களின் சார்பில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தனது வாழ்த்தை தெரிவித்துள்ளார்.

தொப்புள் கொடி உறவு கொண்ட அண்டை நாடான இந்தியாவுக்கு வெளியே, அதிகளவு இந்திய வம்சாவளி மக்கள் பரந்துபட்டு வாழ்கின்றனர்.

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களை ஐந்து தசாப்த காலமாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்திய நாட்டுடன் அன்றும் இன்றும் நல்லுறவு கொண்டு பெருமளவில் பிரதிநிதித்துவப்படுத்தி அவர்களின் நல்வாழ்வுக்கு அர்ப்பணித்து வருகின்றது.

அந்தவகையில், இந்திய நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதில் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களுக்கும் பங்கு உண்டு.

அத்துடன் இன்று போல் என்றும் இந்திய நாட்டுக்கும் அதன் மக்களுக்கும் பேரன்பை வெளிப்படுத்தும் வண்ணம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயற்படும் என்பதை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி கொள்கிறது என தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

# ஜனநாயகத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது



இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படும் நிலையில், இந்திய மக்களுக்கு, இலங்கை வாழ் இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் சார்பாக, இலங்கை தெரிழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் சுதந்திரதின வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

வரலாற்றுக்காலம் தொட்டு, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பேணப்பட்டுவரும் நட்புறவு மற்றும் இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் இ.தொ.கா செயற்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியாவாகும். பல்லின, பல்மொழி பேசும் இந்தியாவின் ஒற்றுமைக்கும் அதன் பன்மைத்துவமே காரணமாகும். உலக ஜனநாயகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழும் இந்தியா, சுதந்திரமடைந்து 75 ஆண்டுகளைக் கடந்துள்ளது.

மக்களின் ஒற்றுமை, கூட்டாட்சித் தத்துவங்கள், அதிகாரப் பரவலாக்கல் மற்றும் ஆட்சிகள் மாறினாலும் நிலைமாறான அரச கொள்கைகள், நிலைபேண்தகு பொருளாதார கொள்கை ஆகியன, இந்தியாவின் வளர்ச்சிக்கு உந்து சக்திகளாக அமைந்துள்ளன என்றும், தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மழைக்காலங்களில்

# கடப்பதில் அச்சம்

## பாலத்தை புனரமைக்குமாறு கோரி ஆர்ப்பாட்டம்

துவாரகஷான்

அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கு உட்பட்ட, உட்லெக் தோட்டத்துக்குச் செல்லும் பிரதான பாலத்தை புனரமைத்து தருமாறு தெரிவித்து, தோட்ட மக்களால் நேற்று (14) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.





2அடி அகலமும் 30 அடி நீளமும் கொண்ட குறித்த பாலத்தை, 800க்கும் மேற்பட்டவர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

1992ஆம் ஆண்டுக்கு முன்னர், பலகைகளால் நிர்மாணிக்கப்பட்டிருந்த பாலத்தையே பிரதேசவாசிகள் பயன்படுத்தி வந்த நிலையில், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் இரும்பால் இரண்டரை அடி அகலமும் 30 அடி நீளமும் கொண்ட பாலம் நிர்மாணித்து கொடுக்கப்பட்டது.

எனினும், கடும் மழையின் போது, பாலம் வெள்ளத்தில் மூழ்குவதுடன், மழைக் காலங்களில் பாலத்தை கடக்க முடியாதவாறு பாலம் பழுதடைந்து காணப்படுகிறது.

இந்தப் பாலத்தை புனரமைத்துத் தருமாறு, மலையக அரசியல்வாதிகளிடம் பலமுறை கோரிக்கை விடுத்த போதிலும், இதுவரை எவரும் இதனை புனரமைத்து கொடுக்க முன்வரவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

பன்றிக்கு வைத்த பொறியில் சிக்கி

# குடும்பஸ்தர் மரணம்

ஆ.ரமேஸ்

உடப்புஸ்ஸலாவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பகாலியத்த கிராமத்தில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான எச். எம்.பிரேமரத்ன (வயது 45) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக உடப்புஸ்ஸலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

தனது உறவினர் ஒருவரின் வயல் நிலத்தை, நாசமாக்கும் பன்றிகளுக்கு வைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்கியே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம், வலப்பனை நீதிமன்ற நீதவானின் உத்தரவுக்கு அமைய, சட்ட வைத்தியரின் ஊடாக பிரேத பரிசோதனை செய்வதற்கு நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை உடப்புஸ்ஸலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சிறுமியுடன் குகைக்குள்

# மறைந்திருந்த ஆண்கள் இருவருக்கும் விளக்கமறியல்

ராமு தனராஜா

லுணுகலை, உடகிருவ காட்டுப்பகுதியில் 14 வயது சிறுமியுடன் மறைந்திருந்த நிலையில், ஒகஸ்ட் 11ஆம் திகதி கைது செய்யப்பட்ட 18 வயது இளைஞர் மற்றும் 53 வயதுடைய நபரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லுணுகலை 27ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த 14 வயதான சிறுமி, இந்த மாதம் 3ஆம் திகதி வீட்டிலிருந்து காணாமல் போயிருந்தார். இந்தச் சிறுமியை கண்டு பிடிப்பதற்காக, விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் தேடுதல் மேற்கொண்ட போது, சிறுமியுடன் இருவர், காட்டுக்குள் குகையொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டனர்.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையிலும் மருத்துவ அறிக்கை கிடைக்கப்பெறவில்லை என பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியை கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும், பதுளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர், இருவரையும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



குறித்த சந்தேகநபர்களில் ஒருவரான 53 வயதுடைய நபர், பேருவளை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன், 18 வருடங்களாக லுணுகலை 27ஆம் கட்டையைச் சேர்ந்த குறித்த சிறுமியின் வீட்டில் கூலித் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

சிறுமியின் பாதுகாப்புக்காகவே, தான் காட்டுக்குள் சென்றிருந்ததாக குறித்த நபர் பொலிஸாரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், 18 வயதுடைய இளைஞர், உடகிருவ பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன், அவரும் சிறுமியின் வீட்டில் கூலி வேலைகளில் ஈடுபட்டிருந்த போது, சிறுமியுடன் காதல் உறவை பேணியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# பூநூல் மாற்றும் விழா





அகில இலங்கை ஐக்கிய இந்து குருமார் சங்கம், ஸ்ரீ வித்யா வேத பாடசாலை, ஸ்ரீ வித்யா குரு பீடம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், கொட்டகலை நகர் ஸ்ரீ முத்துவிநாயகர் தேவஸ்தானத்தில் ஆலய குருக்களுக்கான சம்பிரதாயபூர்வமான பூநூல் மாற்றும் விழா சிவஸ்ரீ ஸ்கந்தராஜா குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 20க்கும் மேற்பட்ட ஆலய குருக்களுக்கு பூநூல் மாற்றப்பட்டது.

(படம்: நீலமேகம் பிரசாந்த்)

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு

# 'பெரண்டினா' நிறுவனம் நிதியுதவி

இரா.யோகேசன்

'பெரண்டினா' நிறுவனத்தால் இன்ஜஸட்டரி தோட்டத்தில் வசிக்கும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் வீதம், மூன்று மாதங்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

'2022ஆம் ஆண்டு மனிதாபிமானம்' என்ற தொனிப்பொருளில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கு, 'பெரண்டினா' நிறுவனத்தின் முகாமையாளரால் இந்த நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில், 'பெரண்டினா' நிறுவனத்தின் சார்பாக உதவி பொது முகாமையாளர் பி.எம். ரஹிம், ஒருங்கிணைப்பாளர் ந.கோகுல்ட் , 'பெரண்டினா' நுண்நிதி நிறுவன முகாமையாளர் எஸ். பிரசன்னா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# டிக்கெட்டில் மோசடி; ஒருவர் சிக்கினார்

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இருவருக்கு, ரயில் டிக்கெட்டை அதிக விலைக்கு விற்ற ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கண்டி ரயில் நிலையத்தில் வைத்து இந்த மோசடி இடம்பெற்றுள்ளதுடன், இதன்போது 2,600 ரூபாய் பெறுமதியான டிக்கெட்டை சந்தேகநபர் 7,300 ரூபாய்க்கு விற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் டிக்கெட்டை இவ்வாறு விற்பனை செய்துகொண்டிருக்கும் போது, கண்டி ரயில் நிலைய அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து மேலும் பல டிக்கெட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. 64 வயதான சந்தேகநபர், கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# 'வன்முறை தீவிரவாதத்தில் இருந்து பாதுகாத்தல்'



மொஹொமட் ஆஸிக்

'சைல்ட் கெயார் பாத் லங்கா' என்ற நிறுவனம் 'வன்முறை தீவிரவாதத்தில் இருந்து பாதுகாத்தல்' என்ற தலைப்பில் சமயப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு செயலமர்வை நடத்தியது. வத்துகாமம், 'லியோ லைப்' வரவேற்பு மண்டபத்தில் நடத்தப்பட்ட மேற்படி செயலமர்வில், மெததும்பறை, குண்டசாலை, பாத்ததும்பறை, பூஜாப்பிட்டி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 400 மாணவ மாணவிகள் பங்கு கொண்டனர்.

குறிப்பாக, வத்துகாமம் பாரதி அறநெறிப் பாடசாலை மாணவர்கள், மடவளை கதீஜா அறபுக் கல்லூரி மாணவிகள், மடவளை றஹீமியா அரபுக் கல்லுரி மாணவர்கள், பௌத்த சமய மற்றும் கிறிஸ்தவ ஞாயிறு பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

'சைல்ட் கெயார் பாத் லங்கா' நிறுவனத்தின் பணிப்பாளர் காமினி ரட்னதிஸ்ஸ, அதன் செயற்றிட்ட அதிகாரியும் முன்னாள் உதவி கல்விப் பணிப்பாளருமான வசந்த சமரவிக்கிரம, இரங்களை வித்தியாலய அதிபர் ஸ்ரீதரன் உட்பட பலர் நிகழ்ச்சிகளை நடத்தினர். இதற்கான அனுசரணையை 'ஹெல்விடாஸ்' அமைப்பு வழங்கியது.

# புதிய ரயிலில் பயணிக்க அதிகளவானோர் ஆர்வம்

ரஞ்சித் ராஜபக்ஸ

கொழும்பு, கோட்டையிலிருந்து பதுளை வரை, வார இறுதி நாள்களில் புதிதாக போக்குவரத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள ரயிலில் பயணிக்க, அதிகளவான சுற்றுலாப் பயணிகள் ஆர்வம் கொண்டுள்ளனர் என ஹட்டன் ரயில் நிலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வார இறுதி நாள்களில் அதிகாலை 5.30 மணிக்கு கொழும்பு, கோட்டையிலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் 1,041 இலக்க விசேட ரயிலானது, மாலை 3.45 மணியளவில் பதுளையை சென்றடையவுள்ளது.




குறித்த ரயிலானது, சில முக்கிய ரயில் நிலையங்களில் மாத்திரம் தரித்து செல்வதுடன், ஹட்டனிலிருந்து பதுளை வரை உள்ள நீர்வீழ்ச்சிகள், சுற்றுலா இடங்கள் என்பவற்றை ரயிலில் பயணித்தவாறே கண்டுகளிக்கவும் புகைப்படங்கள் எடுப்பதற்காகவும் 10 நிமிடங்கள் அந்தந்த இடங்களில் தரித்து நிற்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயிலில் முதல் வகுப்பு பெட்டிகள் இரண்டு, இரண்டாம் வகுப்பு பெட்டிகள் இரண்டு, மூன்றாம் வகுப்பு பெட்டிகள் இரண்டு என்பவற்றுடன் சிற்றுண்டிச்சாலையும் காணப்படுகின்றது.

# காங்கிரஸுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி

பி.கேதீஸ்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1,000 ரூபாய் சம்பளத்தை வழங்க மறுத்து, கம்பனிகள் தாக்கல் செய்திருந்த வழக்கில், தொழிலாளர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டமையானது, தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் சுட்டிக்காட்டி உள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு, நாள் சம்பளமாக 1,000 ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம், சம்பள நிர்ணய சபை ஊடாக கடந்த வருடம் நிறைவேற்றப்பட்டது. அமரர் ஆறுமுகன் தொண்டமானின் விடாமுயற்சியாலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அழுத்தத்தால் பெருந்தோட்ட தொழிலாளர்களின் 1,000 ரூபாய் சம்பள கோரிக்கைக்கு சம்பள நிர்ணயசபை அனுமதி வழங்கியது.



1,000 ரூபாய் சம்பளம் வழங்கும் அரசாங்கத்தின் யோசனையை இரத்து செய்யக் கோரி, மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மார்ச் 2021 இல் முதலாளிகள் சம்மேளனம் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவை, ஒகஸ்ட் ஒன்பதாம் திகதி தள்ளுபடி செய்தது.

அத்துடன், நாள் சம்பளமாக 1,000 ரூபாய் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை 22 கம்பனிகளும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸிக்கு கிடைத்த வெற்றியாகும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆற்றைக் கடக்கும் வரைக்குமான தீர்மானமாக இருக்கக்கூடாது

ஊர்களில் சொல்லப்படும் பழமொழிகளை, யதார்த்தத்துடன் ஒப்பிட்டு பார்த்தோமெனில், சந்தர்ப்பங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏதோவொரு வகையில் பொருத்தமானவைகளாவே இருக்கும். அரசியலைப் பொறுத்தவரையில், மிகச் சரியாகவும் இருந்துவிடும்.

நாட்டுக்கு டொலரே, மிக முக்கிய தேவையாக இருக்கிறது. அதற்காக அரசாங்கம், பல்வேறு குத்துக்கரணங்களை அடித்துக்கொண்டுதான் இருக்கிறது. ஏனினும், கையிருப்பில் வைத்துக்கொண்டு, திட்டங்களை வகுக்கும் வகையில், டொலர் இல்லை. ஆகையால், கைமாற்று வேலைகளையே அரசாங்கம் செய்து கொண்டிருக்கின்றது.

நாடுகள், அமைப்புகளிடம் இருந்து கிடைக்கும் உதவிகள், போதுமானவைகளாக இல்லை. வெளிநாடுகளிடம் கடன்களைக் கேட்டால், பழைய கடன்களையும் வட்டிகளையும் நினைவுபடுத்துகின்றன. இல்லையேல், பல ஒப்பந்தங்களுக்குச் செல்லவேண்டுமென நிபந்தனை விதிக்கின்றன.

நிதியுதவி, நிவாரண உதவி என அனைத்தும், கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துகொண்டு வருகின்றன. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலகுவில் கடனை எதிர்பார்க்க முடியாது. அந்நிதியம் விதித்திருக்கும் நிபந்தனைகளை அரசாங்கம் நிறைவேற்றினால் மட்டுமே, கடன்தொகையை எதிர்பார்க்க முடியும்; அதற்கும் காலம் செல்லும்.

இந்நிலையில், வடக்கு, கிழக்கில் முதலீடுகளைச் செய்யுமாறு, புலம்பெயர் தமிழர்களிடமும் அமைப்புகளிடமும் அரசாங்கம் அவ்வப்போது கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றது. எனினும், கைதுகள், பயங்கரவாத தடைச்சட்டம், பாதுகாப்பு இன்மை, தடைப்பட்டியல் ஆகியவற்றை அவ்வமைப்புகள் காரணம்காட்டி வருகின்றன.

இவ்வாறான நிலையில்தான், இலங்கையில் தடை செய்யப்பட்ட ஆறு புலம்பெயர் தமிழ் அமைப்புகள், 316 தனிநபர்களுக்கு எதிரான தடையை நீக்கியுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத் தடைநீக்கம், நல்லாட்சி அரசாங்கத்திலும் செய்யப்பட்டது. எனினும், அதற்குப் பின்னர் ஆட்சிப்பீடமேறிய கோட்டாபய ராஜபக்‌ஷ, தலைமையிலான அரசாங்கம், மீண்டும் தடைவிதித்தது. புலம்பெயர் அமைப்புகளை மட்டுமன்றி, உள்நாட்டில் இயங்கிய அமைப்புகள் பலவற்றுக்கும் தடைவிதித்தது; பலரும் கைது செய்யப்பட்டனர்.

பயங்கரவாத செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும், பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதி திரட்டுவதாகவும் குற்றஞ்சாட்டியே தடைவிதிக்கப்பட்டது; மீண்டும் தடை நீக்கப்பட்டுள்ளது.

வெளிப்படையாகச் சொல்வதாயின், புலம்பெயர் தமிழர்கள், அமைப்புகளிடம் இருந்து டொலரை நாட்டுக்குள் வரவழைத்துக்குக் கொள்ளும் ஒரு திறவு கோலாகவே, தடைநீக்கத்தை அவதானிக்கமுடிகின்றது.

தீர்மானங்கள் எடுக்கப்படும் போது, அவை வெளிப்படையாகவும் திறந்த மனதுடனும், அரசாங்கங்களின் தேவைகளுக்கேற்ப மாற்ற முடியாத வகையிலும் அமையவேண்டும். இல்லையேல், 'ஆற்றைக் கடக்கும்வரையில் அண்ணன் தம்பி; அப்புறம், நீ யார், நான் யார்' என்ற கதையாகிவிடும். என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

தடைகள் நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. அவ்வாறான அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், நாட்டுக்குள் வந்தால், அவர்களுக்கான பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும். இல்லையேல், எவருமே மீண்டும் திரும்பமாட்டார்கள். அதற்கு முன்னதாக, உள்ளூரிலிருக்கும் குறிப்பாக வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

மாற்றங்கள் தான் ஒருவரை முழுமையாக்கும். ஆனால், அந்த மாற்றங்கள், நியாயமாகவும் அறிவுபூர்வமாகவும் வல்லமையுடனும் நடைபெற வேண்டும்.

உலகம் போகிற வீச்சில், முன்னேற்றங்கள், மாற்றங்கள் வேகமாக நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. எல்லாத் துறைகளிலும் எல்லாத் தேசங்களிலும் புதிது புதிதான கண்டுபிடிப்புகள், தேடல்கள் நடைபெறும் போது, ஒவ்வொரு தனிமனிதனும் தன்னைத்தானே மாற்றிக்கொள்ள வேண்டிய நிலைமை கட்டாயமானது.

யுகம், யுகமாக மாற்றங்கள் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன. மாற்றங்கள் புதுமை அல்ல! பழைமை மூலமே, புதுமைகள் உருவாகின. இனிவரும் காலம், மேலும் அதிசயிக்க வைக்கும். மனித இனம், என்றும் தயார் நிலையில் தன்னை வைத்திருக்க வேண்டும்.

காலம் மாறக் கருத்துகள் மாறும். உணர்க!

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

சீனக் கப்பல்:

# இராஜதந்திர அழுத்தத்தில் இலங்கை



என். கே அஷோக்பரன்

Twitter: @nkashokbharan

சீனாவின் 'யுவான் வாங் 5' என்ற ஆராய்ச்சிக் கப்பல், ஒகஸ்ட் மாதம் 16ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை, இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழையவும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்து நிற்கவும், இலங்கை அரசு அனுமதி அளித்துள்ளது என, ஒகஸ்ட் 13ஆம் திகதி, தனது உத்தியோகபூர்வ ஊடக அறிக்கையில், இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு குறிப்பிட்டிருக்கிறது.

'யுவான் வாங் 5' கப்பலின் இலங்கை வருகை தொடர்பில் இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளிடமிருந்து, கடும் இராஜதந்திர அழுத்தத்தை, கடந்த தினங்களில் இலங்கை சந்தித்திருந்தது. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு, ரணில் ஜனாதிபதியாகிய சில வாரங்களிலேயே, ஒரு மிகப்பெரிய இராஜதந்திர சவாலை சந்திக்க வேண்டிய சூழலை, இது உருவாக்கியிருக்கிறது.

இந்தியாவின் இராணுவக் கப்பல் இலங்கைக்கு வருகிறது; அமெரிக்காவின் இராணுவக் கப்பல் இலங்கைக்கு வருகிறது. இவ்வளவும் ஏன், சில நாள்களுக்கு முன்னர் சீனாவில் தயாரிக்கப்பட்ட பாகிஸ்தானின் இராணுவக் கப்பல் 'தைமூர்' இலங்கைக்கு வந்திருந்தது. இந்த நிலையில், சீனாவின் 'யுவான் வாங் 5' கப்பலின் இலங்கை வருகை மட்டும், ஏன் முக்கியத்துவம் பெறுகிறது என்பது வாஸ்தவமான கேள்வி.

சாதாரண இராணுவக் கப்பலைப் போன்றதல்ல 'யுவான் வாங் 5' ஆராய்ச்சிக் கப்பல். 'ஆராய்ச்சிக் கப்பல்' என்ற பதம், 'யுவான் வாங் 5' கப்பலை விளிக்கப் பயன்பட்டாலும், ஏனைய நாடுகளைப் பொறுத்தவரையில், அது 'ஒற்றறியும் கப்பலாகவே' கருதப்படுகிறது.

குறிப்பாக, இந்தியா இதனை ஒற்றறியும் கப்பலாகவே பார்ப்பதோடு, இலங்கைக்கான இதன் வருகையை, தனது தேசிய பாதுகாப்புக்கு எதிரான பெரும் சவாலாகப் பார்க்கிறது.

சீனாவில் தயாரிக்கப்பட்ட 'யுவான் வாங் 5' கப்பல், 2007இல் இயங்கத் தொடங்கியது. கடல்கடந்த வான்வெளி கண்காணிப்புக்கான அதிநவீன தொழில்நுட்பத்தை கொண்டுள்ள இந்தக்கப்பல், குறைந்தது 222 மீற்றர் நீளமும் 25.2 மீற்றர் அகலமும் கொண்டதாகவும், விண்வெளி மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கான அனைத்து நவீன வசதிகளையும் கொண்டமைந்து உள்ளதாகக் கூறப்படுகிறது.

'யுவான் வாங் 5' என்பது, சீனாவின் 'யுவான் வாங்' தொடரின் மூன்றாம் தலைமுறை விண்வெளி கண்காணிப்பு கப்பலாகும். 'யுவான் வாங் 5' சமீபத்தில், 'வென்டியன்' ஆய்வக தொகுதியை தொடங்குவதற்கான கடல்சார் கண்காணிப்பு பணியை, வெற்றிகரமாக முடித்ததாக செய்திகள் குறிப்பிடுகின்றன. இது, சீன 'டியாங்காங்' விண்வெளி நிலையத்தின் முதல் ஆய்வகத் தொகுதி ஆகும்.

இந்தக் கப்பலானது, இதுவரை 5,80,000 கடல் மைல்களுக்கு மேல் பயணித்துள்ளது. 2020ஆம் ஆண்டில், பசுபிக் பெருங்கடலில், 'லாங் மார்ச்-5பி' ஏவுகணையை ஏவுவதற்கான கடல்சார் கண்காணிப்பு, அளவிடும் பணி என்பவற்றுக்காகவும் இது பயன்படுத்தப்பட்டு இருந்தது. அத்துடன், பல சர்வதேச துறைமுகங்கள் வழியாக, 20,000 கடல் மைல்களுக்கு மேல் பயணித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

'யுவான் வாங் 5' கப்பல் தொடர்பில், இந்தியா அச்சம் கொள்வதற்கான பிரதான காரணம், அதன் ஒற்றறியும் வீச்செல்லையாகும். பல செய்தித்தளங்களும் இந்தக் கப்பல் 700 - 750 கிலோ மீற்றர் அளவுக்கான ஆய்வு வீச்சு எல்லையைக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன. ஆகவே, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இந்தக் கப்பல் நின்றால், அதன் ஒற்றறியும் வீச்செல்லைக்குள், இந்தியாவின் ஸ்ரீ ஹரிகோட்டாவில் அமைந்துள்ள 'இஸ்ரோ'வின் 'சதீஷ் தவான் விண்வெளி மையம்', திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள 'இஸ்ரோ'வின் 'விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்', கல்பாக்கம், கூடங்குளம் அணு உலைகள், தென்னிந்தியாவில் அமைந்துள்ள ஆறு கடற்படைத்தளங்கள், இந்திய கடற்படையின் தெற்குக் கட்டளையகம் உள்ளிட்ட இவையெல்லாம் வரும் என்பதுதான் இந்தியாவின் பெருங்கவலை.

மேலும், ஜூன் 28ஆம் திகதி, இந்தக் கப்பல் இலங்கைக்கு வருவதற்காக சீனா அனுமதி கோரிய போது, ஒகஸ்ட் 11 முதல் 17 வரையான திகதிகளுக்கே அனுமதி கோரப்பட்டிருந்தது. இது, ஒகஸ்ட் 15 இந்திய சுதந்திர தினத்தை மையப்படுத்திய காலமாக அமைந்ததும் இந்தியாவை மேலும் சலனப்படுத்தி இருக்கலாம்.

'யுவான் வாங் 5' ஆராய்ச்சிக் கப்பல், இலங்கைக்கு இந்தக் காலப்பகுதியில் வருவதற்கான எந்தத் தேவையும் இல்லை. மேலும், இலங்கையின் வெளிவிவகார அமைச்சு குறித்த, கப்பலின் வருகைக்கான ஒப்புதலை அளித்த காலமும் இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகிறது.

ஜூலை 12ஆம் திகதி என்பது, கோட்டாபய ராஜபக்‌ஷ நாட்டைவிட்டு வெளியேறி, ரணிலை பதில் ஜனாதிபதியாக நியமித்துவிட்டு, பதவி விலகாது இருந்த குழப்பகரமானதொரு காலப்பகுதி ஆகும். இந்தப் பிரச்சினைகளுக்கு மத்தியில் அன்றி, வெளிவிவகார அமைச்சராக இருந்த ஜீ.எல் பீரிஸ், இந்தக் கப்பலின் வருகைக்கு அனுமதியளித்தது ஏன் என்ற கேள்வியை, இலங்கையர்கள் கேட்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கிறது.

இது மிகப்பெரியதோர் இராஜதந்திர சவாலாக மாறும் என்பதை, ஜீ.எல் பீரிஸ் அறிந்திருக்கவில்லையா? அல்லது, எப்படியும் அடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான்; எனவே, அந்த அரசாங்கத்தில் தனக்கு வாய்ப்பு இருக்காது என்று தெரிந்துகொண்டே, வேண்டுமென்றே இந்தக் காரியத்தைச் செய்தாரா என்றும்கூட கேட்க வேண்டியதாக இருக்கிறது.

ஓர் அரசாக இலங்கையானது, இன்னோர் அரசுக்கு, அதன் வேண்டுகோளை ஏற்று அனுமதியளித்துவிட்டு, அதைப் பின்னர் மறுப்பது என்பது, இராஜதந்திரப் பேரிடராகும். அதைச் செய்வது, அவ்விரு நாடுகளுக்கு இடையேயான உறவைக் கடுமையாகப் பாதிக்கும்.

சீனா, மிக நீண்டகாலமாக இலங்கைக்கு நல்ல நண்பனாகவே இருந்திருக்கிறது. ராஜபக்‌ஷ ஆட்சிக் காலத்தில்தான், சீனா 'வட்டிக்கடை' வியாபாரியாக மாறியது. ஆனாலும், சீனா நட்பு நாடுதான்!

நட்பு நாடாக இருந்தாலும், அதை மீண்டும் மீண்டும் சீனா சொல்லிக்காட்டினாலும், இலங்கை மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்த கடந்த மாதங்களில் சீனா, இலங்கைக்கு என்ன உதவிகளைச் செய்திருந்தது?

ஏறத்தாழ 572 பில்லியன் டொலர் கையிருப்பில் வைத்திருக்கும் இந்தியா, கிட்டத்தட்ட நான்கு பில்லியன் டொலர் அளவுக்கான கடன் உதவிகளை இலங்கைக்கு உதவி, மிகவும் தேவைப்பட்டதொரு காலப்பகுதியில் வழங்கியிருந்தது. ஆனால், ஏறத்தாழ 3,480 பில்லியன் டொலர் கையிருப்பில் வைத்திருக்கும் சீனா, இலங்கைக்கு உதவி மிகவும் தேவைப்பட்டதொரு காலப்பகுதியில், எந்தளவு உதவிகளை வழங்கியிருந்தது? இவையெல்லாம், இலங்கையின் சாதாரண குடிமக்களின் மனதில் எழும் கேள்விகள் ஆகும்.

ஆகவே, இந்தியாவைச் சீண்டிப் பார்க்க, சீனா செய்யும் இந்தப் 'பனிப்போர்' வகையிலான கைங்கரியத்துக்கு, இலங்கை ஏன் பலிகடாவாக வேண்டும்? இதுவும் இலங்கையின் சாதாரண குடிமக்களின் மனதில் எழும் கேள்வி ஆகும்.

சீனாவுக்கும் இந்தியாவுதுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் சிக்கிக்கொண்டுள்ள இலங்கையின் நிலை பரிதாபகரமானது. சீனா, இலங்கையின் நட்பு நாடு; எதிரி நாடல்ல. ஆகவே, சீனாவின் கோரிக்கைகளை நிராகரிக்க, இலங்கைக்கு நியாயமான காரணங்கள் தேவை.

இந்தியாவின் நலனை மையமாகக்கொண்டு மட்டும் இலங்கை, தனது வெளிநாட்டுக் கொள்கையை வகுக்க முடியாது. ஆனால், இலங்கையின் நட்பு நாடும் அயல்நாடும் பெரியண்ணனுமான இந்தியாவைத் தவிர்த்துவிட்டும், இலங்கை ஒரு வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டிருக்க முடியாது. இதுதான், இலங்கை சிக்கியுள்ள சிக்கலின் சிக்கல் நிலை.

மேலும், இலங்கையின் மொத்தக்கடனில் 10% சீனாவால் வழங்கப்பட்டது. ஆகவே, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற, கடன் மீள்கட்டமைப்புச் செய்ய, சீனாவின் ஒத்துழைப்பு அவசியம். ஆகவே, சீனாவை இலங்கை உதாசீனம் செய்யவும் முடியாது.

மறுபுறத்தில், இதன் அரசியலைப் பார்த்தால், ரணிலைப் பொறுத்தவரையில், அவர் ஜனாதிபதியாவதற்கு இந்தியா முட்டுக்கட்டையாகச் செயற்பட்டது என்பதுதான் பொதுவிலுள்ள நம்பிக்கை. அமெரிக்காவும் ரணிலை ஆதரித்திருக்கவில்லை. அதற்கான காரண காரியங்கள் தனித்து ஆராயப்பட வேண்டியவை.

ஆகவே, தன்னை எதிர்க்காத சீனாவை, தனக்கு முட்டுக்கட்டை போட நினைத்த இந்தியாவுக்காகவும், தன்னை ஆதரிக்காத அமெரிக்காவுக்காகவும், எதிர்க்க வேண்டிய தேவை, ரணிலுக்கு இல்லை. டளஸ் ஜனாதிபதியாகிவிடுவார் என்பது, இந்தியாவும் அமெரிக்காவும் கொழும்பிலுள்ள ஆங்கிலம் பேசும், தம்மைத்தாமே 'சிவில் சமூகம்' என முன்னிறுத்தும் சிலரும் போட்ட தப்புக்கணக்கு.

ஆகவே, அரசியல் ரீதியில் இந்தியாவுக்காகவும் அமெரிக்காவுக்காகவும் வேலைசெய்ய வேண்டிய தேவை, ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடையாது. ஆனாலும், இந்தியாவுடனான இலங்கையினது நீண்டகால நல்லுறவைக் கருத்தில் கொண்டு, சீனாவிடம் கப்பலின் வருகையை தாமதிக்க முடியுமா என்று இலங்கை கோரியிருந்தது. அதன்படி, இந்திய சுதந்திர தினம் நிறைவடைந்த பின்னர், ஒகஸ்ட் 16ஆம் திகதி, சீனாவின் 'யுவான் வாங் 5' கப்பல் இலங்கை வரவிருக்கிறது.

இலங்கையின் வரமும் அதன் அமைவிடம்தான்; சாபமும் அதுவேதான்!

## கடிதங்கள்

### மடுக்கரைக்கு பஸ் சேவை சீரின்மையால்

### மக்களும் மாணவர்களும் பாதிப்பு

இலங்கை அரச போக்குவரத்து சபையின் மன்னார் சாலையில் இருந்து, பின் தங்கிய மடுக்கரை கிராமத்துக்குச் செல்லும் பஸ் சேவை சீரான முறையில் இடம் பொறாமையால் மக்களும் மாணவர்களும் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் சாலையில் இருந்து, நாளாந்தம் ஒரு பஸ் போக்குவரத்து சேவையை மேற்கொண்டு வந்தது. மன்னார் சாலையில் இருந்து, மதியம் 1.30 மணிக்கு உயிலங்குளம், கட்டைக்காடு ஊடாக நானாட்டான் சென்று, மடுக்கரை யை சென்றடைகின்றது. பின்னர், மாலை 3.30 மணியளவில் மடுக்கரையில் இருந்து நானாட்டான், கட்டக்காடு, உயிலங்குளம் ஊடாக மன்னரை சென்றடைகின்றது.

பின்னர், மாலை 5.30மணியளவில் மன்னார் சாலையில் இருந்து வாங்காலை, நானாட்டான் ஊடாக மடுக்கரை கிராமத்தை சென்றடைகின்றது. குறித்த பஸ் மறுநாள் காலை 6.30 மணிக்கு மடுக்கரையில் இருந்து நானாட்டான் ஊடாக மன்னாரை வந்தடைகின்றது.

இந்த நிலையில், அண்மைக்காலமாக மன்னாரில் இருந்து மடுக்கரை கிராமத்துக்கான குறித்த பஸ் சேவைகள் சீராக இடம் பொறாமையால், மக்களும் மாணவர்களும் வயோதிபர்களும் பெண்களும் என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டு வழங்கப்பட்ட போதும், மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் சாலை அதிகாரிகள், தொடர்ச்சியாக அசமந்த போக்குடன் நடந்து கொள்வதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே, குறித்த பகுதி மாணவர்கள், மக்களின் நலனை கருத்தில் கொண்டு, குறித்த போக்குவரத்து சேவையை உரிய முறையில் மேற்கொள்ள, மன்னார் சாலை அதிகாரிகள் முன்வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–றொஸாரியன் லெம்பேர்ட்




மனித வளங்கள் அபிவிருத்தி புலமைப்பரிசில் திட்டத்துக்கு

# ஜப்பான் உதவி

பொதுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் திறன்களைக் கட்டியெழுப்பும் மனித வளங்கள் அபிவிருத்தி புலமைப்பரிசில் (JDS) திட்டத்துக்காக, ஜப்பானிய அரசாங்கம் சுமார் ரூ. 761 மில்லியனை நன்கொடையாக வழங்கியுள்ளது.

282 மில்லியன் ஜப்பானிய யென் (சுமார் ரூ. 761 மில்லியன்) தொகையினூடாக, இலங்கையின் பொதுத் துறையைச் சேர்ந்த பல்வேறு கனிஷ்ட நிலை நிறைவேற்று அதிகாரிகளுக்கு, ஜப்பானின் பல்கலைக்கழகங்களில் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு பயன்படுத்தப்படும்.

அதனூடாக, எதிர்காலத்தில் அவர்கள், தமது பிரிவுகளில் தேசிய மட்டத்தில் தலைவர்களாக திகழ்வதற்கான தயார்ப்படுத்தல் வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், 17 பொதுத் துறை அதிகாரிகள் இரண்டு வருட கால முதுமாணி, கலாநிதி பட்டக் கற்கைகளைத் தொடர்வதற்கு 2023 முதல் 2025 வரையான காலப்பகுதியினுள் அனுப்பப்படுவார்கள். பொதுக் கொள்கை, பெரும்பெருளாதாரம், பொது நிதி, முதலீட்டு முகாமைத்துவம், தொழிற்றுறை அபிவிருத்திக் கொள்கை, முதலீட்டு ஊக்குவிப்பு, நகர மற்றும் பிராந்திய அபிவிருத்தி போன்ற பிரிவுகளில் அவர்களின் பட்டப்படிப்புகள் அடங்கியிருக்கும்.

இந்தத் திட்டத்துக்கான உடன்படிக்கையில் 2022 ஒகஸ்ட் எட்டாம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் கே.எம்.எம்.சிறிவர்தன ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

நீண்ட கால நட்பு நாடு எனும் வகையில், நீண்ட கால நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான மனித வளங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளை பல திறன் விருத்தி மற்றும் ஆளுமை விருத்தி திட்டங்களினூடாக ஜப்பான் முன்னெடுக்கின்றது.


2010ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது முதல், JDS திட்டத்தால் இலங்கையின் 188 பொது அதிகாரிகளுக்கு ஆதரவளிக்கப்பட்டுள்ளது. தனிநபர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு மாத்திரம் இந்தத் திட்டத்தினூடாக பங்களிப்பு வழங்கப்படாமல், இலங்கையின் பொதுத் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் சார் திறனை கட்டியெழுப்பவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதனூடாக, தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு, எதிர்காலத்தில் சுபீட்சமாகத் திகழ்வதற்கு பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும்.

JDS அங்கத்தவர்களுக்கு ஜப்பானில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் தமது கல்வி, சமூக செயற்பாடுகளினூடாக தமது மனித வலையமைப்பை பயன்படுத்தி, பரஸ்பர உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையுடன் 70 வருடகால நெருக்கமான நட்புறவுகளைப் பேணும் ஜப்பான், இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதற்கு தன்னை தொடர்ந்தும் அர்ப்பணித்துள்ளது.

குறுங்கால நிலையான வைப்புகளுக்கு

# கொமர்ஷல் அதிக வட்டி



குறுகிய கால வைப்புகளை ஊக்குவிப்பதற்காகவும், வங்கியின் வாடிக்கையாளர்களின் முதலீடுகளுக்கு ஒரு வருடத்துக்கும் குறைவான காலத்துக்குள் ஒப்பிடமுடியாத மற்றும் பாதுகாப்பான வருவாயை வழங்குவதற்காகவும், கொமர்ஷல் வங்கி, வருடாந்தம் 22% வரையிலான உயர் வட்டி வீதங்களுடன், நிலையான வைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தச் சிறப்புத் திட்டத்தின் கீழ், கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர்கள் 100 நாள்கள், 200 நாள்கள், 300 நாள்களுக்கு குறைந்தபட்சம் ரூ. 2 மில்லியன் வைப்புத் தொகையுடன் நிலையான வைப்புக் கணக்குகளைத் தொடங்கி, ஆண்டுக்கு முறையே 20%-21% மற்றும் 22% வருமானத்தைப் பெறலாம்.

வங்கியின் தனிப்பட்ட மற்றும் வணிக வாடிக்கையாளர்கள், இந்தச் சமீபத்திய குறுகிய கால நிலையான வைப்புத் திட்டத்திலிருந்து பயனடைவார்கள். இது ஒரு முதிர்வு காலத்தைக் கொண்டுள்ளது. முதிர்வு காலத்துக்குப் பிறகு, புதுப்பிக்க முடியாதது என்று வங்கி தெரிவித்துள்ளது. தனிப்பட்ட வாடிக்கையாளர்களும் கூட்டாக இந்தக் கணக்குகளைத் திறந்து பயனாளியை பரிந்துரைக்கலாம்.

இந்தப் புதிய நிலையான வைப்புத் திட்டம் குறித்து கருத்து தெரிவித்த வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர் கூறியதாவது: "வட்டி வீதங்கள் அதிகரித்து வருவதால், முதலீட்டாளர்கள் தங்கள் வருமானத்தை அதிகரிப்பதற்கான விருப்பங்களைத் தேடுகின்றனர். ஆனால், அத்தகைய முதலீடுகளின் பாதுகாப்பும் மிக முக்கியமானது. குறிப்பாக, தற்போதைய சூழலில், கொமர்ஷல் வங்கியானது நாட்டின் மிகப் பெரிய மற்றும் அதிக இலாபம் ஈட்டும் தனியார் துறை வங்கியின் பலத்தையும் ஸ்திரத்தன்மையையும், ஒரு நூற்றாண்டுக்கும் மேலான நம்பிக்கையையும், அதிக போட்டித்தன்மை கொண்ட வருமான விகிதத்துடன் வழங்குகிறது" என்றார்.

புதுடெல்லி

# இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினம் இன்று

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம், இன்று (15) கொண்டாடப்படுகின்றது. புதுடெல்லி, செங்கோட்டையில் நடக்கிற கோலாகல விழாவில், பிரதமர் மோடி மூவர்ணக்கொடியை ஏற்றி வைத்து, நாட்டு மக்களுக்கு உரை ஆற்றுவார்.

இந்த விழாவில் கலந்துகொள்ளுமாறு ஏழாயிரம் பேர் அழைக்கப்பட்டுள்ளனர். புதுடெல்லி, செங்கோட்டையில் பல அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. செங்கோட்டையை சுற்றிலும் 10 ஆயிரம் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய கொடி ஏற்றும் வரையில், அதன் 5 கி.மீ பரப்பளவில் பட்டம் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. டி.ஆர்.டி.ஓ என்னும் இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் பிற அமைப்புகளின் டிரோன் தடுப்பு அமைப்புகள் நிறுவப்படுகின்றன.



"செங்கோட்டையை சுற்றிலும் உயர் தெளிவுத்திறன் கொண்ட கெமராக்கள் பொருத்தி இருக்கிறோம். அவற்றில் பதிவாகிற காட்சிகள், 24 மணி நேரமும் கண்காணிக்கப்படும். மதிய உணவு டப்பாக்கள், தண்ணீர் போத்தல்கள், ரிமோட்-கண்ட்ரோல் கார் சாவிகள், சிகரெட் லைட்டர்கள், கைப்பெட்டிகள், கைப்பைகள், கெமெராக்கள், பைனாகுலர்கள், குடைகள் உள்ளிட்டவை புதுடெல்லி, செங்கோட்டை வளாகத்தில் அனுமதிக்கப்படாது" என உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

"அத்துடன், பட்டங்களையோ, பலூன்களையோ, சைனீஸ் லாந்தர்களையோ பறக்க விட்டால் தண்டிக்கப்படுவார்கள். வான்வழி தளங்கள், ஆளில்லா மற்றும் ஆள் உள்ள பறக்கும் பொருட்களில் இருந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில், செங்கோட்டையில் ரேடார்கள் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

கோவை

## கொள்ளையர்களான பட்டதாரி காதல் ஜோடி

கோவை, பொம்மணாம் பாளையத்தில், தனது மனைவியுடன் 80 வயதானவர் வசித்து வந்தார். இவர்களது மகன் சென்னையில் மென் பொறியியலாளர் ஆவார். மகளை திருமணம் செய்து கொடுத்து விட்டனர்.

வீட்டில் கணவன் - மனைவி மட்டுமே வசித்து வந்தனர். சம்பவத்தன்று மனைவி மருத்துவமனைக்கு சென்று விட்டார். இந்த நிலையில், மத்தியானம் இரண்டு மணியளவில், கையில் பொது அறிவு புத்தகத்துடன், முதுகில் பை ஒன்றை மாட்டிக் கொண்டு இளைஞர் ஒருவர் இளம்பெண்ணுடன் வீட்டுக்கு வந்து, தாகமாக இருப்பதாக கூறி குடிக்கத் தண்ணீர் கேட்டுள்ளார்.

தண்ணீர் எடுத்து வர உள்ளே சென்ற முதியவரைப் பின் தொடர்ந்து சென்று, வீட்டுக்குள் அவரை மடக்கிப் பிடித்து, இருகைகளையும் கட்டி, வாயில் பிளாஸ்டரை சுற்றி, சமையல் அறையில் தள்ளியுள்ளனர்.

அதைத் தொடர்ந்து, வீட்டில் இருந்த பீரோ மற்றும் பல இடங்களில் பணம், நகைகளைத் தேடி வீட்டை அலசியுள்ளனர். நீண்ட நேரத்துக்குப் பின்னர், வீட்டில் கிடைத்த பொருட்களை கொள்ளை அடித்து விட்டு, வீட்டின் பின் கதவு வழியாக வெளியேறி உள்ளனர்.

அப்பொழுது, சென்னையில் இருந்து வந்த முதியவரின் மருமகள், வீட்டின் பின் பக்கமாக சென்ற அந்த கொள்ளைக்கார இளஞ்ஜோடியை பிடித்து விசாரித்த போது, இருவரும் அவரைத் தள்ளிவிட்டு, அங்கிருந்து தப்பி ஓடினர். மருமகளோ, "திருடன்...திருடன்" எனக் கூச்சலிட்டதால், ஊரே திரண்டு, அவர்களை விரட்டி உள்ளது. அந்தத் திருட்டு ஜோடியில், ஓட இயலாத பெண், ஒரு புதரில் பதுங்கி இருந்த போது வசமாக சிக்கினார். தன்னுடன் வந்த பெண் பிடிபட்டதை கண்ட அந்த இளைஞர், தானாகத் திரும்பி வந்து, பொதுமக்களிடம் சிக்கிக் கொண்டார். வீட்டுக்குள் முதியவர் வாயில் பிளாஸ்டர் ஒட்டப்பட்ட நிலையில் கிடந்ததை பார்த்த மக்கள், சிக்கிய இருவருக்கும் 'தர்ம அடி' கொடுத்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

பட்டதாரிகளான இவர்கள், ஆறு மாதங்களுக்கு முன் 'இன்ஸ்டாகிராம்' மூலம் பழகி, காதலில் விழுந்தனர். உல்லாசமாக ஊர் சுற்றுவதற்காக, முதியவர்களை ஏமாற்றி, அவர்களின் வீடுகளுக்குள் புகுந்து, தாக்குதல் நடத்தி, நகை, பணத்தை களவாடி வந்தமை தெரியவந்துள்ளது.

திருடனின் மோட்டார் சைக்கிளைக் கைப்பற்றிய பொலிஸார், ஒன்றுக்கும் மேற்பட்ட இலக்கத்தகடுகளை பறிமுதல் செய்துள்ளனர்.

இவர்கள் புத்தகம் விற்பது போல ஊருக்குள் நுழைந்து, ஒரு வாரம் வரையில் நோட்டமிட்டு, ஆள் நடமாட்டம் அறிந்து, கொள்ளையடிப்பது வழக்கம் என்று விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

கவுகாத்தி

## வகுப்பறைக்குள் கட்டிப்பிடித்த ஏழு பேர் இடைநீக்கம்

11ஆம் வகுப்பில் படிக்கும் சில மாணவ, மாணவியர்கள், வகுப்பறைக்குள் கட்டிப் பிடித்துக்கொண்டும் நெருக்கமாக தொட்டுப் பேசிக்கொண்டும் இருக்கும் காணொளி சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. அசாம் மாநிலம், தெற்கு அசாம் பகுதியில் உள்ள கல்வி நிறுவகத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதைச் சக மாணவர் ஒருவர் வீடியோ எடுத்து சமூக வலைத்தளத்தில் பரப்பியதாகக் கூறப்படுகிறது. இந்த விவகாரம், பள்ளி நிர்வாகத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட நான்கு மாணவியர், மூன்று மாணவர்கள் என மொத்தம் ஏழு பேரை, கல்லூரி நிர்வாகம் காலவரையின்றி இடைநிறுத்தம் செய்துள்ளது.

புதுடெல்லி

## கைக்குட்டையால் 'அந்த இடத்தை' சுத்தம் செய்தார்

புதுடெல்லியைச் சேர்ந்த 24 வயது இளைஞர் பிரஞ்சால் தூபே. இவர் தினமும் புதுடெல்லி மெட்ரோ ரயிலில் பயணம் செய்து வருகிறார். ஒருநாள் இவர் பயணம் செய்யும்போது, அவர் கொண்டு வந்த உணவு ரயில் பெட்டியில் கீழே சிந்திவிட்டது. இதையடுத்து சிறிதும் யோசிக்காத தூபே, தனது கைக்குட்டையைக் கொண்டு அந்த இடத்தை சுத்தம் செய்தார்.

இதைப் பார்த்த சக பயணியான சுபம் வர்மா என்பவர், இதை வீடியோவாகவும், புகைப்படமாகவும் எடுத்து ஃபேஸ்புக், ட்விட்டர் போன்ற சமூக வலைதளங்களில் பதிவிட்டார். இதைப் பார்த்த பலரும், இளைஞர் தூபேவுக்கு பாராட்டுகளைக் குவித்து வருகின்றனர்.

இந்தப் புகைப்படம் மத்திய அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து இளைஞர் பிரஞ்சால் தூபேவைப் பாராட்டி, 'மை கவ்' இணையதளத்தில் அவருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது புகைப்படமும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.



ஆந்திரா

## மருமகளின் தலையுடன் நடந்து சென்ற மாமியார்


ஆந்திர மாநிலம், கொத்தா பேட்டை பொலிஸ் நிலையத்துக்கு, மனிதத் தலையுடன் வந்த பெண்ணொருவரை, பொலிஸார் கைது செய்தனர்.

அன்னமய்யா மாவட்டத்தில் உள்ள கொத்தாபேட்டை, ராமாபுரம் என்ற பகுதியை சேர்ந்தவர் சுப்பம்மா. இவருடைய மருமகள் வசுந்தரா (35). இவர்களுக்கிடையே அடிக்கடி குடும்ப தகராறு இருந்து வந்துள்ளது.

வசுந்தராவுக்கு வேறோர் ஆணுடன் தொடர்பு இருப்பதாக சுப்பம்மா சந்தேகப்பட்டார். மேலும், வசுந்தரா தனது குடும்பத்தின் சொத்தை, அவரது பெயருக்கு மாற்றிவிடுவார் என்றும் பயந்து உள்ளார். சுப்பம்மாவும் மற்ற உறவினர்களும் சேர்ந்து, மதிய உணவு சாப்பிட வருமாறு கூறி, வசுந்தராவை தங்கள் வீட்டுக்கு அழைத்து உள்ளனர்.

அங்கு வசுந்தரா கொல்லப்பட்டு, தலை துண்டிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. பின்னர், சரணடைவதற்காக சுமார் ஆறு கிலோ மீற்றர் தூரம் பொலிஸ் நிலையத்துக்கு சுப்பம்மா நடந்து வந்துள்ளார்.

மாமியரே மருமகளை அரிவாளால் வெட்டிய திடுக் தகவல் வெளிச்சத்திற்கு வர, சுப்பம்மாவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைந்தனர்.



பிரித்தானியா

‘ஹரி போட்டர்’ எழுத்தாளருக்கு

# கொலை மிரட்டல்

பிரபல எழுத்தாளர் ‘சல்மான் ருஷ்டி‘ மீது அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் கடந்த 12 ஆம் திகதி மர்ம நபர் ஒருவரினால் கத்திக் குத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலில் படுகாயமடைந்த சல்மான் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், தாக்குதல் நடத்திய நபரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



இந்நிலையில்,ஹரி போட்டர் எழுத்தாளரான ஜேகே ரவ்லிங், ருஷ்டி மீதான தாக்குதல் குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் ”இது அதிர்ச்சியடைய வைக்கும் செய்தி. உடல்நிலை சரியில்லாதது போல் உணர்கின்றேன். அவர் நலமுடன் இருக்கட்டும்’ எனப் பதிவிட்டிருந்தார்.

இதனையடுத்து ஜேகே ரவ்லிங் டுவிட்டர் பதிவிற்கு கீழே கருத்துபதிவிடும் பகுதியில், ‘மீர் ஆசிப் அஜீஸ்‘ என்ற பெயரில் டுவிட்டர் கணக்கு கொண்ட நபர், ‘கவலைப்படவேண்டாம் அடுத்து நீங்கள் தான்’ எனக் கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் கொலை மிரட்டல் விடுத்த நபர் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.



லெபனான்

வங்கி ஊழியர்களைத் துப்பாக்கி முனையில்

## சிறைப்பிடித்த வாடிக்கையாளர்

லெபனானில் அண்மைக்காலமாக கடும் நிதி நெருக்கடி நிலவி வருகிறது. இதனால் அந் நாட்டு மக்கள், வங்கிகளில் இருக்கும் தங்களின் வைப்புத்தொகையில் இருந்து குறிப்பிட்ட தொகையை மாத்திரம் எடுக்கும் வகையில் அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இந்நிலையில் லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள ஒரு வங்கியில் 2 ,10,000 டொலர்களை வைப்பு தொகையாக வைத்துள்ள இளைஞர் ஒருவர் மருத்துவ செலவுகளுக்காகப் பணம் எடுக்க வங்கிக்குச் சென்றுள்ளார். ஆனால் அவர் அதிக தொகையை கேட்டதால் வங்கி ஊழியர்கள் பணம் வழங்க மறுத்துவிட்டனர்.

இதனால் கோபத்துடன் வங்கியை விட்டுச் சென்ற அந்நபர், கையில் துப்பாக்கியுடன் மீண்டும் வங்கிக்கு வந்தார். பின்னர் தான் கேட்ட தொகையைத் தரும்படிக் கூறி வங்கி ஊழியர்கள் அனைவரையும் துப்பாக்கி முனையில் சிறைப்பிடித்தார். இதனால் அப் பகுதயில் பெரும் பரப்பு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார் வங்கி ஊழியர்களை சிறைப்பிடித்த இளைஞரிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்நிலையில் நீண்ட இழுபறிக்குப் பிறகு இளைஞருக்கு 35,000 டொலர்களை வழங்க வங்கி அதிகாரிகள் சம்மதித்தனர். அதைத் தொடர்ந்து சுமார் 6 மணி நேரமாக சிறைப்பிடித்து வைத்திருந்த ஊழியர்களை அவர் விடுவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா

மருந்து விநியோகத்தைத் தடுக்கும் ரஷ்யா?

## உக்ரேன் குற்றச்சாட்டு

ரஷ்ய ஆக்கிரமிப்பு பகுதிகளில் நோயாளிகளுக்கு தேவையான மருந்துகளை அவர்களுக்கு வழங்க விடாமல் ரஷ்யா தடுப்பதாக உக்ரேனின் சுகாதார அமைச்சர் விக்டர் லியாஷ்கோ குற்றம் சாட்டியுள்ளார்.

உக்ரேன் மீது ரஷ்யா தொடுத்து வரும் போர் 6ஆவது மாதத்தை நெருங்கி வருகிறது. இப் போரில் உக்ரேனின் பல நகரங்களை ரஷ்யா ஆக்கிரமித்துள்ளது.

அதே சமயம் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள நகரங்களில் மனித உரிமைகள் மீறல்கள் நடப்பதாக உக்ரேன் அரசும் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

இந் நிலையில் ரஷ்ய ஆக்கிரமிப்பு பகுதிகளில் நோயாளிகளுக்கு தேவையான மருந்துகளை வழங்க விடாமல் ரஷ்யா தடுப்பதாக உக்ரேனின் சுகாதார அமைச்சர் விக்டர் லியாஷ்கோ குற்றம் சாட்டியுள்ளார்.



இது குறித்து ஊடகமொன்றுக்கு அவர் அளித்த செவ்வியில் “6 மாத காலப் போரில், ரஷ்யா சரியான மனிதாபிமான வழித்தடங்களை அனுமதிக்கவில்லை. அந்த வழித்தடங்கள் மூலம் தேவைப்படும் நோயாளிகளுக்கு எங்களால் மருந்துகளை வழங்க முடியும். இந்த நடவடிக்கைகள் ரஷ்யாவால் உள்நோக்கத்துடன் எடுக்கப்படுகின்றன என்று நாங்கள் நம்புகிறோம்.


மேலும் அவை மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் என்று நாங்கள் கருதுகிறோம். அவை ஆவணப்படுத்தப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா

## நீர் பயன்பாட்டுக்கு கட்டுப்பாடுகள்

பிரித்தானியாவில் கோடைகாலத்தின் வெப்பநிலை அதிகரித்து வருவதால், தென் மேற்கு, தெற்கு மற்றும் மத்திய பிரித்தானியாவின் ஒரு சில பகுதிகள் மற்றும் கிழக்கு பிரித்தானியா முழுவதுமாக வறட்சி அறிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் வறட்சி பகுதிகளில் உள்ள குளங்கள், ஏரிகள் மற்றும் நீத்தேக்கங்களில் வழக்கத்தை விடவும் நீரின் அளவு குறைந்து காணப்படுகிறது.

இதன் காரணமாக அப்பகுதி மக்களுகளின் நீர் பயன்பாட்டிற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. இது அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



பிரி த்தானியாவில் அதிகபட்சமாக நேற்று முன்தினம்(13) ஒருசில பகுதிகளில் 34.5 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறு இருப்பினும் இனி வரும் கால ங்களில் லண்டனை தவிற பிற பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்ற வானிலை மையம் அறிவித்துள்ளது.

இம் மழையானது வெப்பம் மற்றும் வறட்சியை ஓரளவு போக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்து உள்ளது.

தாய்லாந்து

## கணவரைத் திருப்திபடுத்த மூன்று பெண்கள் தேவை

### மனைவியின் வினோத விளம்பரம்

தாய்லாந்தைச் சேர்ந்த பெண் ஒருவர் தன் கணவ ரைக் கவனித்துக் கொள்ள பெண்கள் தேவை என வெளியிட்ட விளம்பரம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தாய்லாந்தைச் சேர்ந்த ‘பதீமா சாம்னன் ‘ எனும் 44 வயதான பெண்ணொருவரே இவ்வாறு ‘ தனது கணவரைக் கவனித்து கொள்வதற்கும், அவரை திருப்திபடுத்தவும், அவரை சந்தோஷமாக வைத்து கொள்ளவும் மூன்று பெண்கள் தேவை” என விநோத விளம்பரம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வீடியோப் பதிவாக வெளியிட்ட விளம்பரத்தில் “என்னுடைய கணவனை கவனித்து கொள்வதற்கு மூன்று பெண்கள் தேவை. அவர்கள் அழகாகவும், இளமையாகவும்,



படித்தவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியம். அவர்கள் திருமணம் ஆகாதவர்களாகவும் இருக்க வேண்டும். அவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும், அத்துடன் இலவச தங்குமிடம் மற்றும் இலவச உணவு வழங்கப்படும், அவர்களுக்கும் எனக்கும் இடையே எந்த சண்டையும் வராது என்று நான் உத்தரவாதம் அளிக்கிறேன். மூன்று பேரில் இருவர் என் கணவரின் அலுவலகப் பணிகளில் உதவியாக இருக்க வேண்டும். மீதமுள்ள ஒருவர் என் வீட்டை கவனிப்பதோடு என் கணவர் மற்றும் குழந்தைகளை கவனித்துக் கொள்ள வேண்டும். அவரின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். அத்துடன் எனது கணவர் மிகவும் கடுமையாக உழைப்பவர். அவரின் மகிழ்ச்சிக்காகவே இவை அனைத்தையும் செய்கிறேன். அவரை அனைத்து வகையிலும் கவனித்து நிம்மதியாக வைத்து கொள்ள எனக்கு ஆட்கள் தேவை.” இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்து விளம்பரமானது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# பிறென்ஃபோர்ட்டிடம் தோற்ற யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், பிறென்ஃபோர்ட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் 0-4 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற லெய்செஸ்டர் சிற்றியுடனான போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது. ஆர்சனல் சார்பாக, கப்ரியல் ஜெஸூஸ் இரண்டு கோல்களையும், கிரனிட் ஸாகா, கப்ரியல் மார்டினெல்லி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். லெய்செஸ்டர் சார்பாக ஜேம்ஸ் மடிஸன் ஒரு கோலைப் பெற்றதோடு மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

இந்நிலையில், அஸ்டன் வில்லாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றிருந்தது.



டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

## சென். ஜோசப்பும் வெஸ்லியும் இன்று பலப்பரீட்சை

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், ஹவ்லொக்கில் இன்று பிற்பகல் நான்கு நடைபெறவுள்ள போட்டியில் சென். ஜோசப் கல்லூரியும், வெஸ்லி கல்லூரியும் பலப்பரீட்சை நடாத்தவுள்ளன.

குழு 1ஏயில் ஐந்து போட்டிகளில் விளையாடி நான்கு போட்டிகளில் வெற்றி, ஒரு போட்டியில் தோல்வியுடன் 23 புள்ளிகளுடன் அக்குழுவில் முதலாமிடத்தில் சென். ஜோசப் காணப்பட்டதுடன், குழு 2ஏயில் ஐந்து போட்டிகளில் விளையாடி மூன்று போட்டிகளில் வெற்றி, ஒரு சமநிலை, ஒரு தோல்வியுடன் 21 புள்ளிகளுடன் அக்குழுவில் இரண்டாமிடத்தை வெஸ்லி பெற்றிருந்தது.

சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்தை

## வென்ற சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ்

நூருல் ஹுதா உமர்

சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி தனது இரண்டாவது வெற்றியை சிநேகபூர்வ போட்டிகளில் சாய்ந்தமருது ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் நண்பர்கள் அணி பதிவு செய்தது.

சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அணிக்கு 11 பேர் 18 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கடினபந்து கிரிக்கட் போட்டியில் இந்த வெற்றி பதிவானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஈஸ்டர்ன் பைட்டர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 18 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், கே. முஸ்னி அஹமட் 70, பர்ஹத் பராஸ் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு 183 எனும் வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் 18 ஓவர்களில் 8





விக்கெட்டுகளை இழந்து 124 ஓட்டங்களையே பெற்று 58 ஓட்டங்களால் தோல்வியடைந்தது, துடுப்பாட்டத்தில், சர்பின் 26, றிகாஸ் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் போட்டியின் சிறந்த வீரருக்கான விருது கே. முஸ்னி அஹமட்டுக்கும், சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய பர்ஹத் பராஸுக்கு பணப்பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## மைதானம் இல்லாமலே மாணவர்கள் சாதனை

நடராஜன் ஹரன்

பாடசாலை மாணவர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்திலிருந்து இரண்டு மாணவர்கள் மாகாண மட்டத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

விநாயகர் வித்தியாலயமானது அதிகஷ்ட பிரதேச பாடசாலை ஆகும். இங்கு விளையாட்டு மைதானம் கிடையாது. இவ்வாறு இருக்க நீளம் பாய்தல், குண்டு போடுதல் ஆகிய போட்டிகளில் மாணவர் சாதனை புரிந்து உள்ளனர்.

இது தொடர்பாக பாடசாலை அதிபர் எஸ். ரகுநாதன், பிரதி அதிபர் ரி. நடேசலிங்கம் ஆகியோர் மகிழ்ச்சி வெளியிட்டு உள்ளார்கள். இவர்களை பயிறுவித்த விளையாட்டு பயிற்றுவிப்பாளருக்கு பெற்றோர், பாடசாலை சமூகம் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

## டெய்லரை அறைந்த ராஜஸ்தான் றோயல்ஸ் உரிமையாளர்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) 2011ஆம் ஆண்டு பருவகாலத்தின்போது ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளரொருவரால் தான் அறையப்பட்டதாக நியூசிலாந்தின் முன்னாள் அணித்தலைவர் றொஸ் டெய்லர் தெரிவித்துள்ளார்.

தனது புதிய சுயசரிதைப் புத்தகத்திலேயே குறித்த விடயத்தை டெய்லர் வெளிப்படுத்தியுள்ளதுடன், மொஹாலியில் கிங்ஸ் லெவிண் பஞ்சாப்புடனான போட்டியின் பின்னரே குறித்த சம்பவம் இடம்பெற்றதாகக் கூறியுள்ளார்.



வெற்றி இலக்கு 195 ஓட்டங்களாக இருக்கும்போது தான் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தாகவும் தாங்கள் வெற்றியிலக்கை நெருங்கவில்லையெனவும் பின்னர் ஹொட்டலின் மேற்தளத்தின் மதுபான விடுதியில் அணி, பயிற்சியாளர்கள், முகாமையாளர்கள் இருக்கும்போது ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழப்பதற்காக உங்களுக்கு மில்லியன் டொலர்களை செலுத்தவில்லை என உரிமையாளரொருவர் கூறியதாகவும், பின்னர் மூன்று அல்லது நான்கு தடவைகள் முகத்தில் அறைந்ததாக டெய்லர் வெளிப்படுத்தியுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 15 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது